விலை: 50.00 Viber : 076 636 3378
பக்கங்கள் : இருபது

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk

ஆரோக்கியா
பற்சிகிச்சை நிலையம்


பெற்றோல் செற் ஒழுங்கை, நெல்லியடி.
தொடர்புகளுக்கு:-
075 975 9828,
074 070 2241,
075 975 9827
(4852)

சங்கு 21 வள்ளுவர் ஆண்டு 2051 கார்த்திகை 27 சனிக்கிழமை (12.12.2020) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 359

## எழுமாறாக மேற்கொண்ட பரிசோதனையில்

# மருதனார்மடம் சந்தை வியாபாரிக்கு கொரோனா

- யாழ்.மருதனார்மடம் பகுதியில் சமூகத் தொற்றா?
- மருதனார்மடம் சந்தை மூடப்படும்?
- தொற்றாளர் பல இடங்களுக்கும் சென்று வந்துள்ளார்.
- தொற்றாளருடன் தொடர்பில் இருந்தவர்களை அடையாளப்படுத்துமாறு கோரிக்கை.
- மாவட்ட கொரோனா செயலணி இன்று அவசரமாக கூடுகின்றது.



மருதனார்மடம் சந்தையில் எழுமாறாக மேற்கொள்ளப்பட்ட பிசிஆர் பரிசோதனையில் ஒருவருக்கு கொரோனா தொற்று உறுதியாகியுள்ளது.

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் நேற்று மேற்கொள்ளப்பட்ட பரிசோதனையில் அவருக்கு தொற்று உறுதியானது.

மருதனார்மடம் சந்தையில் மரக்கறிக் கடை வைத்துள்ள ஒருவரே தொற்றிற்குள்ளாகினார்.

மேற்படி தகவலை மாகாண சுகாதார பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஆ.கேதீஸ்வரன் கூறியிருக்கின்றார். இது தொடர்பில் மேலும் அவர் கூறுகையில்,

மருதனார் மடம் சந்தையில் மரக்கறி 19

## நாட்டில் நேற்றும் +762 பேருக்கு தொற்று உறுதி

(கொழும்பு)

நாட்டில் நேற்று மட்டும் +762 பேருக்கு கொரோனா வைரஸ் தொற்று கண்டறியப்பட்டுள்ளதாக இராணுவத் தளபதி சவேந்திர சில்வா தெரிவித்துள் 19

## வவுனியாவில் தாய், மகளுக்கு கொரோனா

(வவுனியா)

வவுனியாவில் தாய்க்கும் மகளுக்கும கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணத்தில் நேற்று முன்னெடுக் 19

## தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலை தொடர்பான முடிவை ஜனாதிபதி கோட்டாவே எடுப்பார்

### இராஜாங்க அமைச்சர் லொஹான்

(கொழும்பு)

"தமிழ் அரசியல் கைதிகள்" என்று தமிழ் அரசியல்வாதிகள் கூறும் சிறைகளிலுள்ள தமிழீழ விடுதலைப் புலிகளின் முன்னாள் உறுப்பினர் 19

## மாகாண சபைத் தேர்தல் விரைவில் நடத்தப்படும்

### சட்ட நடவடிக்கைகளை ஆராயுமாறு தேர்தல்கள் ஆணைக்குழுவிடம் மகிந்த கோரிக்கை

*(கொழும்பு)*

*மாகாண சபைத் தேர்தலை விரைவில் நடத்துவது தொடர்பில் கவனம் செலுத்தி, அதற்கான சட்ட நடவடிக்கைகள் குறித்து ஆராயுமாறு பிரதமர் மகிந்த ராஜபக்ஷ தேர்தல்கள் ஆணைக்குழுவின் உறுப்பினர்களிடம் கேட்டுள்ளார்.*

*(19ஆம் பக்கம் பார்க்க)*



## கொரோனா உச்சம்

# கடந்த 10 நாட்களில் 31 பேர் உயிரிழப்பு

(கொழும்பு)

இலங்கையில் கடந்த பத்து நாட்களில் கொரோனாத் தொற்று காரணமாக 31 பேர் உயிரிழந்துள்ளனர்.

இலங்கையில் கொரோனா வைரஸ் மூன்றாவது அலை மூலம் நேற்று 19

## யாழில் ஆலயங்கள், விடுதிகளுக்கு விதிக்கப்பட்ட கட்டுப்பாடுகள் தளர்வு



### திருமண மண்டபம், தனியார் கல்வி நிலையங்கள், விழாக்கள் நடத்த தொடர்ந்தும் தடை

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்தில் கொரோனா பரவல் அபாயம் காரணமாக விதிக்கப்பட்டிருந்த கட்டுப் 19

## கிழக்கில் முதலாவது கொரோனா மரணம்

(கொழும்பு)

கொரோனா தொற்றினால் கிழக்கு மாகாணத்தில் முதலாவது மரணம் ஏற்பட்டுள்ளது.

சம்மாந்துறையை சேர்ந்த 70 வயதான ஒருவரே உயிரிழந்துள்ளார்.

நேற்று முன்தினம் 19

## பருத்தித்துறையில் தனித்திருந்த முதியவர் சடலமாக மீட்பு

(பருத்தித்துறை)

பருத்தித்துறை மாதனைப் பகுதியில் 19

## கிளிநொச்சியில் விபத்து ஒருவர் உயிரிழப்பு

(கிளிநொச்சி)

கிளிநொச்சி புதுக்காட்டுச் சந்தியில் நேற்றுக் காலை 9.15 மணியளவில் இடம்பெற்ற விபத்தில் ஒருவர் பலியாகியுள்ளார்.

கிளிநொச்சி பளை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட புதுக்காட்டுச்சந்தி பகுதியில் டிப்பர் வாகனமும் மோட்டார் சைக்கிளும் விபத்துக்குள்ளானதில் 19

## தொல்லியல் திணைக்களத்தால் உருத்திரபுரம் சிவன் கோவில் அருகில் ஆய்வு

(கிளிநொச்சி)

கிளிநொச்சி உருத்திரபுரத்தில் அமைந்துள்ள சோழர்காலத்து சிவன் கோவிலான உருத்திரபுரீஸ்வரர் ஆலயத்தின் காணிக்குள் உள்ள பிரதேசம் கடந்த சில ஆண்டுகளுக்கு முன் தொல்லியல் திணைக் 19

# வெதுப்பக பொருட்களின் விலை அதிகரிக்கத் திட்டம்

(கொழும்பு)

பாண் தவிர்ந்த ஏனைய வெதுப்பக உற்பத்திகளின் விலைகளை அதிகரிக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளதாக அகில இலங்கை வெதுப்பக உரிமையாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

அகில இலங்கை வெதுப்பக உரிமையாளர்கள் சங்கத்தின் தலைவர் என்.கே ஜயவர்தன இதனை தெரிவித்துள்ளார்.

குறித்த வெதுப்பக உற்பத்திகளுக்கு பயன்படுத்தும் வெண்ணைக்கு, அறவிடப்பட்ட வரி 400 ரூபாவாக அதிகரிக்கப்பட்டமையே இதற்கான காரணமாகும் என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இறக்குமதி செய்யப்படும் வெண்ணைகளுக்கு அரசாங்கத்தினால் இதுவரை 200 ரூபா வரி அறவிடப்பட்டு வந்தது.

இந் நிலையில் தற்போது அந்த வரியானது 600 ரூபாவாக அதிகரிக்கப்பட்டுள்ளதாக இலங்கை வெதுப்பக உரிமையாளர்கள் சங்கத்தின் தலைவர் என்.கே ஜயவர்தன குறிப்பிட்டுள்ளார்.

(ம-03)


## 4 ஆம் ஆண்டு நினைவலைகள்



தோற்றம் 19.01.1937

அமரர்

மறைவு 26.11.2016

## கிட்டிணன் பொன்னையா

[ திதி : திரயோதசி ]

அன்பின் ஆலயமாய்
அரவணைப்பில் அன்னையாய்
குடும்பத்தின் தலைமகனாய்
குவலயத்தின் நன்மகனாய்
தமக்கென வாழாது
எமக்கென வாழ்ந்து – என்றும்
நல்வழி காட்டினீர்
நான்கு ஆண்டுகள் சென்றாலும்
நாம் மறவோம் எம் தெய்வத்தை...

(C-887)

கூவில், புலோலி தென்மேற்கு,
புலோலி.

குடும்பத்தினர்



## என்றும் நீங்காத நினைவுகளுடன் ஓராண்டு...

அன்னை மடியில் 08 . 09 . 1995



ஆண்டவன் அடியில் 24 . 11 . 2019

அமரர்

## நடராசா கதீசன்

உயிர் தந்த உறவுகளின் கரு அறுத்துச் சென்றாயே!
உடன் பிறந்தவரின் உணர்வழித்துப் பறந்தாயே!
உற்றார் உறவினரின் உறவுதுறந்து கலைந்தாயே!
உன் வாழ்வுக்காய் நீ கண்ட கனவுகள்
நிஜ மலராய் மலராமல் விதி சதியாய் ஆனதுவோ!
விழிகளில் வழிந்தோடும் கண்ணீரின் ஈரம் காயாமல்
ஓராண்டு போனதையா!
மீண்டும் ஒருமுறை உன் வதனம் பார்ப்போமா! கதீசா......

(4873)

12.12.2020 இன்று காலை 10.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் ஆத்ம சாந்திப் பிரார்த்தனை நடைபெறும்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

இல. 475/5, பழைய கண்டி வீதி,
இராமநாதபுரம், கிளிநொச்சி.

குடும்பத்தினர்.



## கண்ணீர் அஞ்சலி



இளைப்பாறிய அதிபரும்,
கொக்குவில் கிருபாகர
சிவசுப்பிரமணிய சுவாமி கோவில்
முன்னாள் பொருளாலருமான

அமரர்

### முத்துக்குமாரசாமி திருஞானசம்பந்தபிள்ளை

அவர்களின் மறைவினால்
துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு
எமது ஆழ்ந்த அனுதாபங்களைத்
தெரிவிப்பதோடு அன்னாரின்
ஆத்மா சாந்தியடைய இறைவனைப்
பிரார்த்திக்கின்றோம்.

(4917)

நிர்வாக சபையினர்
கொக்குவில் கிருபாகர சிவசுப்பிரமணிய சுவாமி கோவில்



## இலங்கை தமிழ் சங்கம் USA

### Thamilar Sangamam - 2020

Worldwide Broadcast : Dec. 12& 13, 2020

ILANKAI TAMIL SANGAM - USA

YouTube f

Live Link (Active Dec. 12, 8 am) → www.sangam.org

www.sangamEvents.org ( Backup)

| Date (USA) | நிகழ்ச்சி நிரல் | அமெ. கிழக்கு | ஐரோப்பா | இலங்கை/ இந்தியா | தென் ஆபிரிக்கா | மலேசியா |
|---|---|---|---|---|---|---|
| Saturday 2020 - 12 - 12 (USA) | யூ டியூப்/ முகப் புத்தகம் ஆரம்பம் | 8am | 1pm | 6.30pm | 3pm | 9pm |
| | வரவேற்பு நடனம்/ இசை மலேசியா : இயல் இசை நாடகம் | 9am | 2pm | 7.30pm | 4pm | 10pm |
| | சீமான் பேச்சு முன்னோட்டம் நடனம்: 'முத்தைத் தரு பக்தி' உலகளாவிய நிகழ்வு | 10am | 3pm | 8.30pm | 5pm | 11pm |
| | மெல்லிசை கணேஷ் கிருபா - GK பாடகர்கள் அறிமுகப் பிரிவு | 11am | 4pm | 9.30pm | 6pm | 12midn |
| | இசையுடன் ஒரு மணி நேர இடைவேளை | | | | | |
| | உலகளாவிய நிகழ்வுகள் தெ.ஆபிரிக்கா, நோர்வே, பிரான்ஸ்,பிரிட்டன், அமெரிக்கா (TBD) | 2pm | 7pm | 12.30pm | 9pm | 3am |
| | அலைகள் : உலகளாவிய இசை அரங்கில் தமிழ் இசைக் கலைஞர்கள், பேர்ள் | 4pm | 9pm | 2.30am | 11pm | 5am |
| | அமெரிக்க நடனங்களும் தமிழ் பாடசாலைகளும் | 5pm | 10pm | 3.30am | 12midn | 6am |
| | கனடா: நடனம்/ இசை தேர்ந்த கருப்பொருள்களின் மறு ஒலிபரப்பு | 6pm | 11pm | 4.30am | 1am | 7am |
| | புளோரிடா - வயலின் (பாரம்பரியம்) நடனம்: 'தீராத விளையாட்டு' | 8pm | 1am | 6.30am | 3am | 9am |
| | கணேஷ் கிருபாவின் ஈழ. தத்துவப் பாடல்கள் | 9pm | 3am | 7.30am | 5am | 10am |

Saturday Program Ends. Rebroadcast for Asia Viewers
Secretary@sangam.org
Phone: (011) - 732 - 743 - 5468

(4913)

# "ஜெமினிட்ஸ்" விண்கல் பொழிவை காணும் வாய்ப்பு



(கொழும்பு)

ஜெமினிட்ஸ் விண்கல் பொழிவை நாளை 13 ஆம் திகதி இலங்கையர்கள் காண முடியும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

கொழும்பு பல்கலைக்கழக இயற்பியல் துறையின் வானியல் மற்றும் விண்வெளி அறிவியல் பிரிவின் தலைவர் பேராசிரியர் சந்தன ஜயரத்ன இதனை தெரிவித்துள்ளார். இதன்போது கருத்து வெளியிட்டுள்ள அவர், "நாளை, நாளை மறுதினம் வருடாந்திர விண்கல் பொழிவு நிகழ்கிறது. அதிகாலை வரை நிலவு ஒளி இல்லாததால் இந்த ஆண்டு அதிக விண்கற்களைக் காணலாம்.

நகர ஒளி மாசுபாடு இல்லாமல் வானம் தெளிவாகவும், இருட்டாகவும் இருந்தால், ஒரு மணி நேரத்திற்கு 120 விண்கற்கள் அல்லது நிமிடத்திற்கு ஒன்று அல்லது இரண்டு விண்கற்கள் காணப்படலாம். இரவு 9 மணிக்குப் பிறகு கிழக்கு நோக்கிய விண்கற்களை இலங்கையர்கள் காணலாம். நாளை நள்ளிரவில் மற்றும் நாளை மறுதினம் சூரிய உதயத்திற்கு முன் விண்கல் பொழிவை காணமுடியும்.

நாளை மறுதினம் அதிகாலை 2 மணி முதல் அதிகாலை 4.30 மணி வரை சூரிய உதயத்திற்கு முந்தைய இருண்ட நேரங்களில் இதைப் பார்ப்பதற்கான சிறந்த நேரம் இருக்கும்.

ஏனெனில் மழையின் கதிரியக்க புள்ளி வானத்தில் மிக அதிகமாக உள்ளது மற்றும் உச்ச செயற்பாடு ஏற்படுகிறது.

இந்த விண்கல்மழை வெள்ளை, மஞ்சள், பச்சை, நீலம் மற்றும் சிவப்பு போன்ற பல வண்ணங்களில் காணப்படும் விளக்குகளின் தடத்துடன் பல வண்ண காட்சிக்கு பிரபலமானது. இந்த நட்சத்திரங்கள் ஜெமினி என்ற நட்சத்திர விண்மீன் திசையிலிருந்து வருவதாகத் தெரிகிறது, எனவே இதற்கு ஜெமினிட் என்று பெயரிடப்பட்டுள்ளது" எனக் குறிப்பிட்டுள்ளார். (நி-4)

# மிலானிலுள்ள இலங்கைக்கான துணைத்தூதரகம் தற்காலிகமாக மூடப்பட்டது

(ரோம்)

இத்தாலியின் மிலானில் உள்ள இலங்கை துணைத் தூதரகத்தின் அலுவலகம் டிசெம்பர் 15 ஆம் திகதி வரை தற்காலிகமாக மூடப்பட்டுள்ளது.

கொரோனா நோயாளர் ஒருவர் அண்மையில் துணைத் தூதரகத்தின் அலுவலகத்திற்கு வந்தது உறுதி செய்யப்பட்டதையடுத்தே இந்த முடிவு எட்டப்பட்டுள்ளது.

அலுவலகத்தை கிருமி நீக்கம் செய்யவும், அனைத்து ஊழியர்களையும் பி.சி.ஆர்.சோதனைக்குட்படுத்தவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

தூதரகத்தின் பொது அலுவலகத்தை எப்போது திறப்பது என்பது குறித்த முடிவு சில தினங்களுக்குள் எட்டப்படும்.

இத்தாலியில் வசிக்கும் இலங்கையர்களுக்கு ஏதேனும் அவசர தேவைகள் ஏற்பட்டால் காலை 9.30 மணி முதல் மாலை 4.30 மணிவரை 388 724 9016 என்ற எண்ணுடன் தொடர்பு கொள்ளுமாறும் அறிவிக்கப்பட்டுள்ளது. (நி-4)

# வரவு-செலவு திட்டத்தின்படி உடனடியாக அமுல்படுத்தப்படவுள்ள திட்டங்கள்

(கொழும்பு)

2021 ஆம் ஆண்டிற்கான வரவு-செலவுத் திட்டத்தில் நிறைவேற்றப்பட்ட பல விடயங்களை உடனடியாக அமுல்படுத்த அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

வீடுகள் மற்றும் சொத்துக்களுக்கான கடன் சலுகை, சூரிய சக்தி மின்சார வசதிகளை பெற்றுக்கொள்வதற்கான கடன் சலுகை, பிரிவெனாக்களில் கற்றல் செயற்பாடுகளில் ஈடுபட்டுள்ள தேரர்களுக்கான சலுகைகள், கொவிட்-19 தொற்றினால் பாதிக்கப்பட்ட சிறு மற்றும் மத்தியதர வர்த்தக செயற்பாடுகளுக்கான மூலதன கடனை பெற்றுக் கொடுத்தல் ஆகியன உடனடியாக செயற்படுத்தப்படவுள்ளன.

கொவிட்-19 தொற்றுக்குள்ளாகிய அரச ஊழியர்களின் செலவுகளை காப்புறுதி நிதியத்தினூடாக வழங்கவும் இளம் தொழில் முயற்சியாளர்களுக்கு புதிய வர்த்தக செயற்பாடுகளை ஆரம்பிப்பதற்கான நிதியை வழங்கவும் அரசாங்கத் தீர்மானித்துள்ளது.

உள்ளூர் பால் உற்பத்தியை அபிவிருத்தி செய்வதற்காக பால் பண்ணையாளர்கள் வலுப்படுத்தப்படவுள்ளனர்.

அரச மற்றும் தனியார் துறையில் பணியாற்றுவோருக்கு வீடுகளை பெற்றுக்கொள்வதற்கான கடன் வசதிகளை வழங்கவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது. (நி-4)

# பிரதேசசபை அமர்வில் மீண்டும் குழப்பம்

(அராலி)

வலி.தென்மேற்கு பிரதேச சபையில் கடந்த 20 ஆம் திகதி ஏற்பட்ட குழப்பத்தினால் ஒத்திவைக்கப்பட்ட சபை அமர்வானது நேற்று நடைபெற்றது.

கடந்த அமர்வின் போது சபையில் குழப்பம் விளைவித்து தண்ணீர்க்குவளையினை வீசி உடைத்த உறுப்பினர் நேற்றும் சபையில் குழப்பம் விளைவித்தார்.

இதனால் மற்றுமொரு கட்சி உறுப்பினர் ஒருவர் இச் சபையில் தமக்கு பாதுகாப்பு இல்லை. பாதுகாப்பை உறுதி செய்யுங்கள் எனக் கூச்சலிட்ட வண்ணம் தலைக் கவசத்தினை எடுத்து அணிந்தார்.

இதனால் சில நிமிடங்கள் சபையில் அமைதியின்மை ஏற்பட்டது. (5-4-104)




அதிமேதகு ஜனாதிபதியினதும்
கௌரவ பிரதமரினதும்
சிந்தனையின் செயல்வடிவம்



வடக்கின் விவசாயப் புரட்சி

North Lanka IIT City Campus
Faculty of Agriculture

Agriculture Research உடன் இணைந்த பயிற்சி
கல்லூரியுடன் கூடிய Modern Research Farm
Kariyalai Nakapaduvaan, Poonakary.

Proposed by – S.A.Balasubramaniyam Reading Ph.D
Rector - North Lanka IIT
City Campus
Faculty of Agriculture

Proposed Presented - Divisional Secretary
Divisional Secretariat
Poonakary
Kilinochchi.

Location –
Kariyalai Nakapaduvaan
Poonakary Divisional



NORTH LANKA RESEARCH FOUNDATION

B.Sc விவசாய விஞ்ஞான பாடநெறிக்கான
விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

முதலாவது பிரிவில்
30 மாணவர்கள் மட்டுமே
அனுமதிக்கப்படுவர்.

UGC அங்கீகாரம் உடைய
பல்கலைக்கழகம்

தகமை - NVQ Level 04 / O/L / A/L

Duration: 03 Years முழுநேரப் பயிற்சி

விண்ணப்ப முடிவுத் திகதி: 20.10.2020 (சி-891)

கற்கைநெறி ஆரம்பமாகிவிட்டது.

தொடர்புகளுக்கு: 076 7504535, 077 8849677, 077 8657957



North Lanka IIT City Campus
Approved Centre Of

Business University Costa Rica UGC Approved University-Approved UNESCO

பட்டப்பின் கல்வி முகாமைத்துவ டிப்ளோமா (PGDEM)

Postgraduate Diploma in Education management

பாடநெறிக்கான விண்ணப்பம் கோரல்-2021

மேற்படி தமிழ் மொழி மூல பாடநெறி 2021 ஜனவரி மாதம் ஆரம்பமாகவுள்ளது. online classes மூலம் இலங்கையின் எப்பாகத்திலிருந்தும் கற்க முடியும்.

பின்வருவோர் பங்கு பற்றலாம்: இலங்கை கல்வி நிர்வாக சேவை ஆசிரிய கல்வியியலாளர் சேவை, அதிபர் சேவை, ஆசிரியர் சேவை, தனியார், சர்வதேச பாடசாலை அதிபர், ஆசிரியர்கள், தனியார் நிறுவனத் தலைவர்கள்

விண்ணப்பிப்பதற்கான தகைமை Any-Degree

காலம்: ஒரு வருடம்

விண்ணப்ப முடிவு திகதி -2021-01-01

விண்ணப்பப்படிவத்தை அலுவலகத்தில் ஆயிரம் ரூபா செலுத்தி பெற்றுக்கொள்ளவும். (சி-891)

தலைவர்-076 750 4535

உபவேந்தர்-077 068 1958 பதிவாளர்-077 884 9677

Top Floor, People's Bank Building
Stanley Road, Jaffna.

# சங்கானை பனை தென்னை வள அபிவிருத்தி கூட்டுறவுச் சங்கம் (வ/து) கிளை பொதுச் சபைக் கூட்டம்

**(13.12.2020, 19.12.2020, 20.12.2020)**

சங்கானை பனை தென்னை அபிவிருத்திச் கூட்டுறவுச் சங்கத்தின் 12 கிளைகளுக்கான கிளைக் குழுக்களை தெரிவு செய்வதற்கான கிளைப் பொதுச் சபை கூட்டங்கள் கீழ்வரும் விபரப்படி மூன்று திக்திகளில் 13.12.2020, 19.12.2020, 20.12.2020 சங்கானை கலாசார மண்டபத்தில் நடாத்துவதற்கு உரிய ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இதற்கான உரிய அழைப்புக் கடிதங்கள் வாக்களிக்கத் தகுதியுள்ள அங்கத்தவர்களுக்கு கையளிக்கப்பட்டுள்ள நிலையில் உரிய கிளையின் வாக்களிக்கத் தகுதியுள்ள அங்கத்தவர்கள் அனைவரும் உரிய கூட்டத் திகதிகளில் சமுகமளித்து கிளைக்குழு உறுப்பினர்களை தெரிவு செய்து ஒத்துழைப்பு வழங்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறீர்கள்.

| தொ இல | கிளை இல | கிளையின் பெயர் | கூட்டம் நடைபெறும் திகதி | கூட்டம் நடைபெறும் இடம் | தவிசாளர் பெயர் |
|---|---|---|---|---|---|
| 01 | 50 | சங்கானை | 13.12.2020 | சங்கானை கலாசார மண்டபம் | திரு.ம.கபிலன் |
| 02 | 51 | நிற்சாமம் | 13.12.2020 | சங்கானை கலாசார மண்டபம் | திரு.அ.வசிகரன் |
| 03 | 52 | சித்தன்கேணி | 13.12.2020 | சங்கானை கலாசார மண்டபம் | திரு.வ.நிதர்சன் |
| 04 | 53 | காலையடி | 13.12.2020 | சங்கானை கலாசார மண்டபம் | திரு.ச.பிரேமிலன் |
| 05 | 54 | குடாக்கனை | 13.12.2020 | சங்கானை கலாசார மண்டபம் | திரு.க.சுரேஸ்பாபா |
| 06 | 56 | தொல்புரம் | 19.12.2020 | சங்கானை கலாசார மண்டபம் | திரு.அ.வசிகரன் |
| 07 | 58 | வட்டு.கிழக்கு | 19.12.2020 | சங்கானை கலாசார மண்டபம் | திரு.இ.உதயகுமார் |
| 08 | 59 | வட்டு.மேற்கு | 19.12.2020 | சங்கானை கலாசார மண்டபம் | திரு.க.சுரேஸ்பாபா |
| 09 | 60 | அராலி வடக்கு | 19.12.2020 | சங்கானை கலாசார மண்டபம் | திரு.பா.பாலரவி |
| 10 | 55 | காளுவன் | 20.12.2020 | சங்கானை கலாசார மண்டபம் | திரு.த.தவப்பிரியன் |
| 11 | 57 | பொன்னாலை | 20.12.2020 | சங்கானை கலாசார மண்டபம் | திரு.பா.குருபரன் |
| 12 | 61 | அராலி மேற்கு | 20.12.2020 | சங்கானை கலாசார மண்டபம் | திரு.இ.வேல்குமார் |

**குறிப்பு:-**

நாட்டில் நிலவும் கொவிட் - 19 பேரிடர் நிலைமை காரணமாக அந்தந்தக் கிளை நிலையங்களில் கிளைக்குழு தெரிவுகளை மேற்கொள்வதற்கான கிளை பொதுச் சபைக் கூட்டங்களை நடாத்த முடியாத காரணத்தால் சுகாதாரப் பகுதியினரின் அறிவுறுத்தல்கள் மற்றும் அனுமதிக்கமைய சகல கிளை நிலையங்களுக்குமான கிளை பொதுச் சபை கூட்டங்கள் மேற்குறிப்பிட்ட 3 திகதிகளிலும் சங்கானை கலாசார மண்டபத்தில் நடாத்துவதற்கு சகல ஒழுங்குகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன. கூட்டத்திற்கு சமுகமளித்து வாக்களிக் தகுதியுடைய சகல அங்கத்தவர்களும் சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றி ஒத்துழைப்பு வழங்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறீர்கள். (4919)

**செயலாளர்,**
**பனை தென்னை வள அபிவிருத்தி கூட்டுறவுச் சங்கம், பிரதான வீதி, சங்கானை.**

# பல்கலைக்கழகம் அமைக்க கொட்டகலையில் இடம் ஒதுக்கீடு



(ஹற்றன்)

மலையகத்தில் பல்கலைக்கழகம் அமைப்பதற்கான இடம் கொட்டகலையில் ஒதுக்கப்பட்டுள்ளது என இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் பொதுச் செயலாளரும், இராஜாங்க அமைச்சருமான ஜீவன் தொண்டமான் தெரிவித்துள்ளார்.

தலவாக்கலை, வட்டகொடையில் நடைபெற்ற நிகழ்வில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

மலையக பல்கலைக்கழகத்துக்கான இடம், கொட்டகலை பகுதியில் ஒதுக்கப்பட்டுள்ளதுடன் விரைவில் விவசாய கல்லூரி ஒன்றும் அமைக்கப்படும்.

மலையக புத்திஜீவிகளுடன் கலந்துரையாடி, பாடத்திட்டங்கள் பற்றி தீர்மானிக்கப்படும் என அவர் குறிப்பிட்டுள்ளார். (நி-4)

# குணமடைந்தோர் எண்ணிக்கை அதிகரிப்பு

(கொழும்பு)

கொரோனா தொற்றினால் பாதிக்கப்பட்டிருந்த நிலையில் சிகிச்சை பெற்று வந்த 570 பேர் குணமடைந்துள்ளனர். இதற்கமைய நாட்டில் கொரோனா தொற்றில் இருந்து குணமடைந்தவர்களின் எண்ணிக்கை 22 ஆயிரத்து 831 ஆக அதிகரித்துள்ளது. கொரோனா தொற்றுக்குள்ளான மேலும் 7 ஆயிரத்து 636 பேர் வைத்தியசாலைகளில் தொடர்ந்தும் சிகிச்சை பெற்று வருகின்றனர். (நி-7)

# நுவரெலியாவிற்கு சுற்றுலா வருவதை தவிர்த்துக் கொள்க



(ஹற்றன்)

நுவரெலியாவிற்கு சுற்றுலா செல்வதை தவிர்த்துக் கொள்ளுமாறு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

நுவரெலியா மாவட்ட செயலாளர் ரோஹண புஷ்பகுமார இவ்வாறு கோரிக்கை விடுத் துள்ளார்.

இதுதொடர்பாக கருத்து வெளியிட்டுள்ள அவர், "நுவரெலியா மாவட்டத்தில் தற்போது 250 இற்கும் மேற்பட்ட கொரோனா தொற்றாளர்கள் அடையாளங் காணப்பட்டுள்ளனர்.

எனவே நாம் ஒரு சில கட்டுப்பாட்டு நடவடிக்கைகளை விதிப்பதற்கு நடவடிக்கை எடுத்துள்ளோம். இதன் பிரகாரம் டிசெம்பர் மாதம் இறுதிப்பகுதி வரை நுவரெலியாவிற்குள் ஏனைய பிரதேசங்களில் இருந்து சுற்றுலாப்பயணிகள் வருகை தருவதை கட்டுப்படுத்துமாறு நாம் கேட்டுக்கொள்கின்றோம்.

குறிப்பாக பண்டிகைக்காலத்தின் போது அதனை தவிர்த்து செயற்படுமாறும் கேட்டுக் கொள்கின்றோம்.

நுவரெலியாவிலுள்ள மக்கள் மற்றும் அங்கு சுற்றுலா மேற்கொள்ள தீர்மானித்துள்ள ஏனைய பகுதிகளில் உள்ளவர்களின் பாதுகாப்பு கருதியே இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

எனவே சுற்றுலா பயணங்களை தவிர்த்து செயற்படுமாறு நாம் கேட்டுக் கொள்கின்றோம்" எனக் குறிப்பிட்டுள்ளார். (நி-4)

# கேள்வி அறிவித்தல்

## சபை நிதி வேலைத் திட்டம் - 2020

## உள்ளூராட்சி திணைக்களம், கரைச்சி பிரதேச சபை - கிளிநொச்சி

1. கரைச்சி பிரதேச சபையின் சபை நிதி குறித்த வேலைத் திட்டத்திற்கான கொடுப்பனவுக்கென பயன்படுத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.
2. தவிசாளர், கரைச்சி பிரதேச சபை, கிளிநொச்சி சார்பாக தகுதிவாய்ந்த ஒப்பந்தகாரர்களிடமிருந்து அரக்கு முத்திரையிடப்பட்ட கேள்விகளை கீழ்க்காட்டப்பட்ட அட்டவணையில் விபரிக்கப்பட்ட கட்டுமான வேலைகளுக்காக கோருகின்றார்.
3. தேசிய போட்டி கேள்வி கோரல் நடைமுறைக்கு அமைவாகவே கேள்வி கோரப்படுகின்றது. ஆயினும் வடமாகாண நிர்வாக எல்லைக்குள் பதிவுசெய்யப்பட்ட கேள்விதாரர்களுக்கு மட்டும் மட்டுப்படுத்தப்பட்டுள்ளது.
4. கேள்வி பெறத் தகுதியுடையவராவதற்கு, வெற்றிபெறும் கேள்விதாரர் கறுப்புப் பட்டியலில் (Black List) சேர்த்துக் கொள்ளப்படாதவராகவும், அட்டவணையிற் காட்டியபடி பொருத்தமான தரத்தில் கட்டட அமைப்புக்கான சிடா (CIDA) பதிவினை மேற்கொண்டவராகவும் இருத்தல் வேண்டும். தேவையான தகைமைகள், கேள்வி ஆவணம் பகுதி 4இல் குறிப்பிடப்பட்டுள்ளது. மேலதிக தகவல்கள் தரவு அட்டவணை (**Schedule** 5) கேள்வி ஆவணம் பகுதி 5 இல் காட்டப்பட்டுள்ளது.
5. குறித்த பெறுகை நடைமுறை பொதுநிதி சுற்றுநிருபம் இலக்கம் 04/2016(ii) மற்றும் பொதுநிதி சுற்றுநிருபம் இலக்கம் 03/2020 என்பவற்றைப் பின்பற்றி மேற்கொள்ளப்படுகின்றது.
6. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் கரைச்சி பிரதேச சபை, கிளிநொச்சி. (தொலைபேசி: 021 228 5761, தொலைநகல்: 021 228 5690, **E-Mail:** kilinochchi1kps@gmail.com) இல் இருந்து மேலதிக தகவல்களைப் பெற்றுக் கொள்ளலாம். அத்துடன் மேற்கூறிய இடத்தில் வேலைநாட்களில் காலை 09.00 மணி முதல் 14.00 மணி வரை **21.12.2020** ஆம் திகதி வரையான காலப் பகுதியில் கேள்வி ஆவணங்களை பார்வையிடலாம்.
7. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் பூரணமான கேள்வி ஆவணமொன்றை ஆங்கில மொழியில் தவிசாளர், கரைச்சி பிரதேச சபை, கிளிநொச்சி எனும் இடத்திலிருந்து**14.12.2020** ஆம் திகதியிலிருந்து **21.12.2020** ஆம் திகதிவரை அலுவலக நாட்களில் மட்டும் காலை 09.00 மணிக்கும் 14.00 மணிக்கும் இடையில் மீளளிக்கப்படாத கட்டணமாக ரூபா.2,000/- (வரி நீங்கலாக) செலுத்தி பெற்றுக்கொள்ளலாம். இத்தொகை பணமாகச் செலுத்தப்படல் வேண்டும்.
8. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் பூரணமான கேள்வி ஆவணமொன்றை ஆங்கில மொழியில் இரு பிரதிகளில் தயாரித்து தவிசாளர், கரைச்சி பிரதேச சபை,**A9** வீதி, கிளிநொச்சி எனும் முகவரிக்கு **21.12.2020** ஆம் திகதி மாலை 14.30 மணிக்கு முன்பதாக கிடைக்கக் கூடியதாக அனுப்பிவைக்கப்பட வேண்டும். பிந்திய கேள்விகள் நிராகரிக்கப்படும். கேள்வியானது, கேள்வி நேரம் முடிவடைந்த உடனேயே வருகை தரும் கேள்விதாரர் அல்லது அவர்களின் பிரதிநிதிகள் முன்னிலையில் திறக்கப்படும்.
9. கேள்வியானது கேள்விகள் சமர்ப்பிக்கும் இறுதித் திகதியிலிருந்து 77நாட்கள் (எழுபத்தேழு நாட்கள் 08.03.2021 வரையும்) செல்லுபடியாகும்.
10. கேள்விப் பிணை வைப்புத் தொகையானது கீழே அட்டவணையிற் காட்டப்பட்டவாறு அமையும்.

| கேள்வி எண் | வேலை விபரம் | மதிப்பீட்டு தொகை (ரூ)மில்லியன் **(With out Vat)** | ஒப்பந்த காலம் | வேண்டப்படும் தரம் | வேண்டப்படும் கேள்விப் பிணை | |
|---|---|---|---|---|---|---|
| | | | | | பிணை வைப்பு(ரூபா) | செல்லுபடியாகும் காலம் |
| **NP/KI/KAPS/COU/03/2020** | தர்மபுரம் ஆயுர்வேத வைத்தியசாலை | **8.31Mn** | 90 நாட்கள் | **C5,C6, C7(Buildings)** | 84,000.00 | **05.04.2021** |

கேள்வி கோரல் பற்றிய முன் கூட்டிய கூட்டம் 16.12.2020 ஆம் திகதி காலை 10..30 மணிக்கு தவிசாளர், கரைச்சி பிரதேச சபை, கிளிநொச்சி அலுவலகத்தில் நடைபெறும். ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் கலந்துகொள்ளலாம். இதற்கு எதுவித கொடுப்பனவுகளும் வழங்கப்படமாட்டாது.

(C-892)

**தவிசாளர்**

**12.12.2020** **கரைச்சி பிரதேச சபை, கிளிநொச்சி**

# ஒன்பதாண்டு நினைவஞ்சலி



அமரர்.
**பொன்னர் கனகசபை**
(ஓய்வுபெற்ற ஆசிரியர்)

திதி:- தேய்பிறை கார்த்திகை திரயோதசி

ஐயா, உங்கள் இனிய முகம் பார்த்து
அருகிருந்து கதைப்பதற்கு
ஏங்குகின்றோம்.
திருக்குறளும் வாசகமும்
தந்து நிற்கும் மெய்மையினை
தானுணர்ந்து அரன்தாள் அடைந்தீரோ
என்றும் எம்மை காத்து நிற்க
எந்நாளும் உங்கள் நினைவுடனே
வாழ்ந்திடுவோம்.
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

தோற்றம்:- 04.12.1934
மறைவு:- 23.11.2011

முருகன் கோவிலடி,
புலோலி.

(C-888)

குடும்பத்தினர்.


# முன்பள்ளிகளை மீள ஆரம்பிக்க தீர்மானம்

(கொழும்பு)

எதிர்வரும் ஜனவரி மாதம் முன்பள்ளிகளை ஆரம்பிக்க தீர்மானிக்கப்பட்டுள்ளது.

மகளிர் மற்றும் சிறுவர் அபிவிருத்தி, முன்பள்ளி மற்றும் ஆரம்பக் கல்வி, பாடசாலை உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் கல்விச் சேவை இராஜாங்க அமைச்சர் பியல் நிசாந்த இதனைத் தெரிவித்துள்ளார்.

முன்பள்ளிகளை ஆரம்பிப்பது தொடர்பில் பல சுற்று கலந்துரையாடல்கள் முன்னெடுக்கப்பட்டதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

எனினும், சுகாதார அமைச்சின் பரிந்துரைகள் கிடைக்கும் வரை இது குறித்த தீர்மானங்களை அமுல்படுத்த முடியாதுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.



தேசிய முன்பள்ளி கொள்கையை ஜனாதிபதியிடம் கையளிக்கவுள்ளதாகவும் இராஜாங்க அமைச்சர் தெரிவித்துள்ளார். அது தொடர்பான சட்டமூலத்தை கல்வி அமைச்சர் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸிடம் கையளிக்கவுள்ளதாக அவர் தெரிவித்தார். (நி-4)


# துயர் பகிர்கின்றோம்

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியின்
ஆசிரியை செல்வி.அ.காயத்திரி அவர்களின்
அன்புத் தந்தையார்
அமரர்.திரு.சுப்பிரமணியம் அருள்நாதன்
அவர்கள் 10.12.2020 அன்று இறைவனடி
சேர்ந்தார். அவரின் பிரிவால் துயருறும்
குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த
அனுதாபங்களை தெரிவித்துக்கொள்கிறோம்.

யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி,
ஆசிரியர் கழகம்.

(4912)



# கண்ணீர் அஞ்சலி



சைவப்புலவர்மணி **மு.திருஞானசம்பந்தபிள்ளை**

சைவசித்தாந்த முதுகலைமாணி வருகைதரு விரிவுரையாளர்
(யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்)

சைவப்புலவர்மணி மு.திருஞானசம்பந்தபிள்ளை

அவர்களின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது
ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாரின்
ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

(C-889)

ஆத்ம சாந்தியடைய பிரார்த்திக்கும்:
பீடாதிபதி, பேராசிரியர்கள், விரிவுரையாளர்கள்,
இந்துக்கற்கைகள் பீடம், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.



# நான்காம் ஆண்டு நினைவஞ்சலி

அமரர்.சுப்பையா தர்மகுலராஜா (தர்மா)

தோற்றம்
1968 . 07 . 17



மறைவு
2016 . 11 . 27

திதி: 12.12.2020

யாழ்.ஆதியாமலை, உடுப்பிட்டியைப் பிறப்பிடமாகவும்
சுவிட்சர்லாந்தை வசிப்பிடமாகவும் கொண்டிருந்த

**அமரர்.சுப்பையா தர்மகுலராஜா (தர்மா)**

நான்கு ஆண்டுகள் ஓடி மறைந்தாலும்
இன்றும் உன் பிரிவால் கலங்கி நிற்கின்றோம்
காலம் கடந்து சென்றாலும்
எங்கள் மனத்துயர் கடந்து செல்லவில்லை
கண்ணாரக் கான நினைத்தோம்
கடைசியில் கண்மூடித் தூங்கினாயே நிரந்தரமாக
காலம் பதில் சொல்லும் என்று
கடவுளை வேண்டுகிறோம் ஆத்ம சாந்திக்காய்.

(4890)

ஆதியாமலை,
உடுப்பிட்டி.

தகவல்:
சுப்பிரமணியம் இராஜேஸ்வரி (சகோதரி)



# பிரார்த்தனை அஞ்சலி

தாய் மடியில்
1938 . 12 . 25



சிவன் அடியில்
2020 . 12 . 10

**சைவப்புலவர் மணி**
**மு.திருஞானசம்பந்தபிள்ளை**

சைவ சித்தாந்த நல்லறிஞராய்
சைவ வாழ்வு வாழ்ந்து காட்டிய உத்தமரே!

இணுவில் சைவ சித்தாந்தப் பயிற்சி மையத்தின்
விரிவுரையாளராயிருந்த நல்லாசானே!

இணுவில் மத்திய கல்லூரியின் அதிபராயிருந்து
கல்லூரியை வளர்த்த கல்விமானே!

சைவப்புலவர் சங்கத்தின் வாழ்நாள் தலைவரே!
நீங்கள் சிவனடியில் சேர்ந்திருக்க வேண்டிப்
பிரார்த்தித்து அஞ்சலி செய்கின்றோம்.

(4910)

திருவாவடுதுறை ஆதீன சைவ சித்தாந்த பயிற்சி மையத்தினர்,
இணுவில்.

# எழுதுமட்டுவாழ் மக்களின் குடிநீர்ப் பிரச்சினைக்கு தீர்வு



(சாவகச்சேரி)

வெள்ள இடரினால் பாதிக்கப்பட்டுள்ள எழுதுமட்டுவாழ் தெற்கு மக்களின் குடிநீர்ப் பிரச்சினையை சாவகச்சேரி பிரதேச சபை தீர்த்து வைத்துள்ளது.

அண்மையில் ஏற்பட்ட வெள்ள இடரால் வெகுவாகப் பாதிக்கப்பட்ட எழுதுமட்டுவாழ் தெற்கு கிராமத்தை பிரதேச சபைத் தவிசாளர் பார்வையிடச் சென்ற போது அம்மக்கள் விடுத்த கோரிக்கையை அடுத்து உடனடியாக அம் மக்களின் குடிநீர்ப் பிரச்சினை தீர்த்து வைக்கப்பட்டுள்ளது.

அத்துடன் வெள்ள இடரினால் பாதிக்கப்பட்டு எழுதுமட்டுவாழ் தெற்கு ஸ்ரீகணேசா வித்தியாலயத்தில் தங்கியுள்ள மக்களைப் பார்வையிட்டதுடன் அங்குள்ள மக்களின் அத்தியாவசியத் தேவைகளைப் பூர்த்தி செய்ய நடவடிக்கை எடுப்பதாகவும் தெரிவிக்கப்பட்டது.

எழுதுமட்டுவாழ் கிராமத்தில் உள்ள கிணறுகள் மற்றும் மலசலகூடங்களுக்குள் வெள்ள நீர் புகுந்து பாவிக்க முடியாத நிலையில் காணப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

இதன் காரணமாகவே பிரதேசசபை கிராமத்தில் நீர்த் தாங்கிகளை வைத்து குடிநீர் வசதியை ஏற்படுத்திக் கொடுத்துள்ளது. (5-4-30)

# பாரதியாரின் 138 வது பிறந்த தின நிகழ்வு



(யாழ்ப்பாணம்)

மகாகவி சுப்பிரமணிய பாரதியாரின் 138 ஆவது பிறந்த தின நினைவு நிகழ்வு யாழ்ப்பாணத்தில் நேற்று இடம்பெற்றது.

யாழ்ப்பாணத்தில் உள்ள இந்தியத் துணைத் தூதுவர் அலுவலகத்தின் ஏற்பாட்டில் நல்லூர் ஆலயத்திற்கு பின்பக்க வீதியிலுள்ள பாரதியார் நினைவுச் சிலை அடியில் இந்நிகழ்வு நடைபெற்றது.

பாரதியார் நினைவுத் தூபிக்கு இந்திய துணைத் தூதுவர் மலர்மாலை அணிவித்ததைத் தொடர்ந்து நிகழ்வில் கலந்து கொண்டிருந்தவர்கள் பாரதியாருக்கு மலர்மாலை அணிவித்து அஞ்சலி செலுத்தினர்.

இந்நிகழ்வில் தமிழரசுக் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராஜா, வடக்கு மாகாண சபையின் அவைத் தலைவர் சீ.வீ.கே.சிவஞானம், யாழ். மாநகரசபை முதல்வர் இமானுவேல் ஆர்னல்ட், யாழ். மாநகர ஆணையாளர் த.ஜெயசீலன், முன்னாள் மாகாண சபை உறுப்பினர்களான பா.கஜதீபன், எம்.கே.சிவாஜிலிங்கம் மற்றும் அனந்தி சசிதரன், சிவசேனை அமைப்பின் தலைவர் மறவன் புலவு சச்சிதானந்தம் உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டனர். (5-4-33-101)

# டெங்கு ஒழிப்பு நடவடிக்கைக்கு ஒத்துழைப்பு வழங்குங்கள்

(குப்பிழான்)

கீரிமலை கருகம்பனை தமிழ் மன்றம் சனசமூக நிலையம், இந்து இளைஞர் கழகம், இந்து இளைஞர் விளையாட்டுக் கழகம் ஆகியன இணைந்து நடத்தும் டெங்கு ஒழிப்பு நடவடிக்கை நாளை 13 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை இடம்பெறவுள்ளது.

இந்நடவடிக்கை காலை 8.30 மணியளவில் கருகம்பனை தமிழ் மன்றம் சனசமூக நிலையத்தில் ஆரம்பமாகி அதனை அண்டிய பகுதிகளான வசந்தபுரம், கூவில், மயிலங்கூடல் மற்றும் கீரிமலை ஆகிய பகுதிகளில் முன்னெடுக்கப்படவுள்ளது.

ஆகவே, மேற்படி பகுதிகளைச் சேர்ந்த மக்கள் டெங்கு நுளம்பு பெருகுவதற்கு ஏதுவாக காணப்படும் டயர், தேங்காய் சிரட்டை, பிளாஸ்ரிக் போன்ற வற்றை உரிய முறையில் பொதி செய்து தங்கள் வீடுகள் முன் வைத்து ஒத்துழைக்குமாறு மேற்படி செயற்றிட்டத்தின் ஏற்பாட்டாளர்கள் கேட்டுள்ளனர். (5-4-18)

# வெள்ள வாய்க்கால் அமைக்குமாறு நகரசபை உறுப்பினர் கோரிக்கை

(சாவகச்சேரி)

சாவகச்சேரி நகரசபை எல்லைக்குட்பட்ட கோவிற் குடியிருப்பு கிராமத்தில் நிரந்தரமாக வெள்ள வாய்க்கால் அமைக்கப்பட வேண்டும் என சாவகச்சேரி நகரசபை உறுப்பினர் க.தர்சன் கோரிக்கை விடுத்துள்ளார்.

சாவகச்சேரி நகர சபையில் நேற்று முன்தினம் இடம்பெற்ற மாதாந்த கூட்டத்தின் போதே அவர் இக்கோரிக்கையை விடுத்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

கோவிற்குடியிருப்பு கிராம உத்தியோகத்தர் பகுதியில் உள்ள பெரியமாவடிப் பகுதி வெள்ள அனர்த்தத்தால் அடிக்கடி பாதிக்கப்படுகிறது.

குறிப்பாக தற்போது ஏற்பட்டுள்ள வெள்ள அனர்த்தத்தால் பெரியமாவடிப் பகுதியில் உள்ள உப்புக்கேணிக்குளம் நிரம்பி அருகில் உள்ள 60 இற்கும் மேற்பட்ட வீடுகளுக்குள் நீர் புகுந்து வழிந்தோட வழியின்றி தேங்கி நிற்கின்றது.

அத்துடன் கிராமத்தில் பல போக்குவரத்துப் பாதைகளும் வெள்ளத்தால் தடைப்பட்டன.

யுத்த இடப்பெயர்விற்கு முன்னர் கோவிற்குடியிருப்பு கிராமத்தில் உரிய வடிகாலமைப்பு வசதிகள் காணப்பட்டன.

அதன் காரணமாக கடும் மழை காலங்களில் உப்புக் கேணி குளம் நிரம்பி மேலதிக நீர் வடிகாலமைப்பு ஊடாக கச்சாய் கடலினை சென்றடையும்.

ஆனால் தற்போது வெள்ள வாய்க்கால்கள் அற்றுப் போயுள்ளன. எனவே வீதி அபிவிருத்தி அதிகார சபையினரின் அனுமதியுடன் கோவிற்குடியிருப்பு கிராமத்தில் நிரந்தரமாக வடிகாலமைப்பு ஏற்படுத்த சாவகச்சேரி நகரசபை நடவடிக்கை எடுக்க வேண்டும் என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (5-4-30)



**சங்கானை, இலங்கை வங்கிக் கிளையில் நவீன இலத்திரனியல் பண வைப்பு மற்றும் பணம் எடுப்பதற்கான இயந்திரம் கடந்த புதன்கிழமை திறந்து வைக்கப்பட்டது. இந் நிகழ்வில் இலங்கை வங்கியின் வடமாகாண உதவிப் பொது முகாமையாளர் எஸ்.சிவானந்தன், சங்கானை இலங்கை வங்கிக் கிளை முகாமையாளர் எஸ்.சாந்தன், சங்கானை வர்த்தக சங்க தலைவர் லயன் ஆ.குணசேகரம், வலி.மேற்குப் பிரதேச சபையின் தவிசாளர் எஸ்.நடனேந்திரன் ஆகியோர் கலந்து கொண்டனர். (படம்:-ரவிசாந்)**



**வட்டுக்கோட்டை இந்து இளைஞர் சங்கத்தால் புரேவிப் புயலால் பாதிக்கப்பட்ட வவனியா வடக்கு மன்னக்குளம் கிராமத்தைச் சேர்ந்த 30 குடும்பங்களுக்கு 46 ஆயிரம் ரூபாய் பெறுமதியான உலருணவுப் பொருட்கள் வழங்கப்பட்டன.**

# எல்லாவற்றையும் இறக்குமதி செய்தால் வலுவான பொருளாதாரத்தை உருவாக்க முடியாது

(கொழும்பு)

**எல்லாவற்றையும் இறக்குமதி செய்து விற்பனை செய்வது எளிதானது. நாம் அவ்வாறு செய்தால் ஒரு வலுவான பொருளாதாரத்தை உருவாக்க முடியாது. சமூகத்தின் அனைத்து பிரிவுகளையும் பாதுகாக்கும் வகையில் பொருளாதார வளர்ச்சி ஏற்பட வேண்டும். இதற்கு தனியார் துறையின் பங்களிப்பு மற்றும் புதிய அணுகுமுறைகள் மிக முக்கியமாகும்” என்று ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தெரிவித்தார்.**

நேற்று முன்தினம் ஜனாதிபதி அலுவலகத்தில் தனியார்துறை தொழில் முயற்சியாளர்களுடன் இடம் பெற்ற கலந்துரையாடலின் போது தெரிவித்தார்.

பொருளாதாரத்தின் அனைத்துத் துறைகளிலும் சீரான வளர்ச்சியைக் கொண்டு வருவதே தனது நோக்கம் என்று கூறிய ஜனாதிபதி, இந்த முயற்சிக்கு உதவும் நடவடிக்கைகளைக் கொண்டு வருமாறும், அதற்கான தடைகளை அடையாளம் காணுமாறும் தனியார் துறைக்கு முன்மொழிந்தார்.

குறிப்பாக கொவிட்-19 பரவலின் காரணமாக முடங்கியிருக்கும் பொருளாதாரத்திற்கு புத்துயிரளித்து நீண்டகால பொருளாதார வளர்ச்சியை அடைவதை நோக்கமாகக் கொண்டு தனியார் தொழில் முயற்சியாளர்களை குழுக்களாக சந்திக்க ஜனாதிபதி அண்மையில் முடிவு செய்தார்.

இன்றைய சந்திப்பு இரண்டாவது குழுவுடன் இடம் பெற்றது. சுற்றுலா, கட்டடம் மற்றும் வீதி நிர்மாணம், தொடர்பாடல் தொழில்நுட்பம், ஹோட்டல் வணிகம், மூலிகை உற்பத்தி, கால்நடைகள், பசும்பால், உப்பு உற்பத்தி, விவசாய உற்பத்திகள், சிறு ஏற்றுமதி பயிர்கள், சேதன பயிர்ச்செய்கை போன்ற துறைகளில் முன்னணி நிறுவனங்களின் தலைவர்களுடன் ஜனாதிபதியின் செயலாளர் பி.பீ. ஜயசுந்தர, முதலீட்டுச் சபையின் தலைவர் சஞ்சய மொஹட்டால ஆகியோரும் இந்த கலந்துரையாடலில் பங்கு பற்றினர். (நி-4)



# கண்டி மாவட்ட பாடசாலைகள் மீண்டும் வழமைக்கு

(கொழும்பு)

கொரோனாத் தொற்றுப் பரவல் காரணமாக கண்டி நகரில் மூடப்பட்டுள்ள பாடசாலைகள்சில வற்றின் கல்வி நடவடிக்கைகளை மீளவும் ஆரம்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இதற்கமைய, கண்டி நகரில் அமைந்துள்ள 42 பாடசாலைகள் நாளை மறுதினம் திங்கட் கிழமை மீண்டும் திறக்கப்படவுள்ளதாக மத்திய மாகாண ஆளுநர் லலித் யூ கமகே தெரிவித்துள்ளார். (நி-4)

# 9 கிலோ தங்கம் கடத்தல்

(கொழும்பு)

இலங்கையிலிருந்து இந்தியாவிற்கு 9 கிலோ கிராம் தங்கம் கடத்தி செல்லப்பட்டுள்ள நிலையில் ஐந்து பேர் இந்திய கடலோர காவல் படையினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இந்தியாவில் தூத்துக்குடி வருவாய் புலனாய்வுத் துறை அதிகாரிகளுக்கு கிடைத்த இரகசிய தகவலை அடுத்து நேற்று வெள்ளிக்கிழமை அதிகாலை மன்னார் வளைகுடா கடல் பகுதியில் ரோந்து பணியில் ஈடுபட்டனர். அப்போது சந்தேகத்திற் கிடமாக நின்று கொண்டிருந்தபடகை சோதனை செய்த போது படகில் இருந்த நபரது உடம்பில் மறைத்து வைத்திருந்த சுமார் பல இலட்சம் மதிப்பிலான 9 கிலோ கிராம் கடத்தல் தங்கம் பறிமுதல் செய்யப்பட்டுள்ளது.

மேலும் அவருடன் இருந்த நால்வர் என மொத்தம் ஐந்து பேரை கைது செய்த இந்திய கடலோர காவல் படையினர், கடத்தலுக்குப் பயன்படுத்திய படகு ஒன்றையும் பறிமுதல் செய்துள்ளனர். இந்நிலையில், குறித்த சம்பவம் தொடர்பாக மேலதிக விசாரணைகள் நடத்தப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (நி-4)

## துணைக் கொத்தணிகள் உருவாவதற்கான வாய்ப்புகள் அதிகமுள்ளன - எச்சரிக்கிறார் பாலசூரிய

(கொழும்பு)

மேல் மாகாணத்திற்கு வெளியே உள்ள பகுதிகளில் துணைக் கொரோனா கொத்தணிகள் உருவாகும் ஆபத்து இருப்பதாக எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இலங்கை பொதுச்சுகாதார பரிசோதகர்கள் சங்கத்தின் செயலாளர் மகேந்திர பாலசூரிய இவ்வாறு எச்சரிக்கை விடுத்துள்ளார்.

குறித்த பகுதிகளில் காணப்படும் கொரோனாத் தொற்றாளர்களின் மூலங்களைக் கண்டுபிடிப்பதன் மூலம் அது உறுதிப்படுத்தப்படும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார். (நி-4)

# பொதுப்பயன்பாடுகள் ஆணைக்குழு விவகார பின்னணியில் சீனா - ஐ.தே.க.சாடல்

(கொழும்பு)

முறையான விதிகளை பின்பற்றாது நுரைச்சோலை மின்னிலையத்தின் எஞ்சிய கட்டுமானப் பணிகளை சீனாவிற்கு பெற்றுக்கொடுக்கும் திட்டத்திற்கு எதிர்ப்பு தெரிவித்தமையினாலேயே பொதுப்பயன்பாடுகள் ஆணைக்குழுவை இரத்து செய்ய ஆளும் கட்சி மும்முரமாக நின்று செயற்படுவதாக ஐக்கிய தேசிய கட்சி சாடியுள்ளது.

ஐக்கிய தேசிய கட்சி உறுப்பினர்கள் நேற்று முன்தினம் வியாழக்கிழமை தலைவர் ரணில் விக்கிரமசிங்கவை சந்தித்து கலந்துரையாடிய போதே மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டது.

பொதுபயன்பாடுகள் ஆணைக் குழுவை இரத்து செய்வதற்கான அறிப்பை ஜனாதிபதி செயலாளர் முன் வைக்கின்றார்.

இதன் பின்னணியில் சீனாவின் திட்டமொன்றுள்ளது. அதாவது நுரைச்சோலை மின் நிலையத்தின் எஞ்சிய கட்டுமானப் பணிகளை சீனா பெற்றுக் கொள்ளும் வகையில் சில நகர்வுகளை முன்னெடுத்துள்ளது.

எவ்விதமான விலைமனுக் கோரலும் இல்லாது நுரைச்சோலை மின் நிலையத்தின் கட்டுமான பணிகளை சீனாவிற்கு வழங்கும் திட்டத்தை பொதுபயன்பாடுகள் ஆணைக்குழு எதிர்த்தமையினாலேயே இவ்வாறானதொரு நிலை ஏற்பட்டுள்ளது.

எந்தவொரு நிலைமை காணப்பட்டாலும் அரசியலமைப்பை மீறி அதிகாரியொருவரால் செயற்பட இயலாது. 2002-2004 ஆண்டு காலப்பகுதியில் ஐக்கிய தேசிய கட்சி ஆட்சியில் தான் பொதுபயன்பாடு ஆணைக்குழு உருவாக்கப்பட்டது. நாட்டின் எதிர்கால நலன்களை கொண்டே இந்த ஆணைக் குழுவை உருவாக்கினோம்.

தேசிய மின் துறையில் ஏற்பட கூடிய மோசடிகளை தவிர்த்து மக்களுக்கு பயன் தரும் வகையில் இந்த ஆணைக்குழு ஊடாக செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டது.

ஆனால் இன்று மோசடிகளுக்கான ஆணைக்குழுவை இரத்துச் செய்ய அரசாங்கம் செயற்பட்டு வருகின்றது என இதன் போது தெரிவிக்கப்பட்டது. (நி-4)

# கைதிகளின் போராட்டம் வன்முறையாக மாற பாதாள உலகக்குழு உறுப்பினர்களே காரணம்

(கொழும்பு)

மகர சிறைச்சாலையில் கொரோனா வைரஸ் தொற்று ஏற்படுவதிலிருந்து தப்பிக்க கைதிகள் ஆரம்பித்த போராட்டத்தை, பாதாள உலகக் குழுக்களின் உறுப்பினர்கள் சிலரே வன்முறையாக மாற்றியுள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

மகர சிறைச்சாலை விவகாரம் தொடர்பாக விசாரணை நடத்திய ஐந்து பேர் கொண்ட குழுவே இதனைத் தெரிவித்துள்ளது. குறித்த குழுவின் அறிக்கையை நீதியமைச்சர் பாராளுமன்றில் தாக்கல் செய்திருந்தார்.

அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது, "சில கும்பல் தலைவர்கள் ஒருவருக்கொருவர் பழிவாங்க முயன்றதால், கைதிகள் நடத்திய ஆர்ப்பாட்டம் வன்முறைக்கு திரும்பியுள்ளது.

மேலும், கைதிகள் யாரும் துப்பாக்கிகள் ஏதும் வைத்திருக்கவில்லை. அதிகாரிகள் மற்றும் நிலைமையைத் தணிக்க வந்தவர்கள் மாத்திரமே துப்பாக்கிகளை வைத்திருந்தனர்.

இருப்பினும், வாயிலுக்கு அருகில் மரக் கட்டைகள், இரும்பு கம்பிகள் மற்றும் கற்கள் இருப்பதை அவதானிக்கக் கூடியதாக இருந்தது.

இதேவேளை சில கைதிகள், பல வகையான மாத்திரைகளைத் திருடி அவற்றை உட்கொண்டுள்ளமை விசாரணையில் கண்டறியப்பட்டுள்ளது.

மேலும், சிறை வளாகத்தில் இருந்த முக்கியமான ஆவணங்களை கைதிகள் எரித்துள்ளனர்.

அத்துடன் விளக்கமறியலில் கைதிகள் வைக்கப்பட்டுள்ள பகுதி தவிர, வளாகத்தில் உள்ள அனைத்து கட்டடங்களும் சாம்பலாக எரிக்கப்பட்டுள்ளன.

கொரோனா வைரஸ்தொற்று நேர்மறையாகக் கண்டறியப்பட்டவர்களைப் பிரிக்கவும், மற்றையவர்களை சுய தனிமைப்படுத்தலில் அந்தந்த வீடுகளுக்கு அனுப்ப நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்" என அறிக்கையில் குறித்த குழு பரிந்துரைத்துள்ளது. (நி-4)


**EXTRANAL PHAMACISTS EXAMINATION**

**ONLINE CLASSES COMMENCING FROM JANUARY 2021**

**MINIMUM EDUCATIONAL QUALIFICATIONS**

- G.C.E O/L ORDINARY PASS IN ENGLISH LANGUAGE.
- G.C.E A/L ORDINARY PASS IN SCIENCE SUBJECTS INCLUDING CHEMISTRY.
- AGE - UNLIMIT.

**BATCH 1** -WEEKDAY CLASSES ON MONDAY, WEDNESDAY AND FRIDAY FROM 09.00 A.M TO 12.30 P.M.

**BATCH 2** - WEEKEND CLASSES SATURDAY & SUNDAY FROM 09.00 A.M TO 12.30 P.M.

**PAYMENT FOR EACH BATCH PER MONTH RS 2500/=.**

IF YOU ARE INTERESTED TO FOLLOW PHAMACIST EXAM ONLINE COURSE PLEASE WHATSAPP THE FOLLOWING DETAILS TO **0776256292** FULL NAME, PERMANENT ADDRESS, NIC NUMBER, YOUR WHAT SAPP NUMBER AND A/L QUALIFI CATIONS DETAILS.

**CONTACT=NEHRU SIR, JAFFNA COLLEGE.**

**T/P : 0773164 251**

(4911)

## உங்களால் முடியாவிட்டால் சொல்லுங்கள்

# எல்லை மீறும் இந்திய மீனவர்களை நாங்கள் கட்டுப்படுத்துகின்றோம்

## முல்லை. மீனவர்கள் கொதிப்பு

(பனிக்கன்குளம்)

முல்லைத்தீவு கடற்பரப்பில் அண்மைய நாட்களாக இடம்பெறும் இந்திய மீனவர்களின் அத்துமீறிய மீன்பிடி நடவடிக்கைகள் காரணமாக முல்லைத்தீவு மீனவர்களின் வாழ்வாதாரம் பாதிக்கப்பட்டு முல்லைத்தீவு மீனவர்கள் பட்டினிச்சாவின் விளிம்புக்கு சென்றுள்ளனர். இதற்கு உடனடியாக இதற்கு தீர்வு காணப்பட வேண்டும் எனவும் இதற்காக அரசுக்கு எதிர்வரும் 15 ஆம் திகதிவரை காலக்கெடு வழங்கியுள்ளதோடு தீர்வில்லையேல் எதிர்வரும் 15 ஆம் திகதி மாபெரும் போராட்டம் முன்னெடுக்கவுள்ளதாகவும் இது தீர்வு கிடைக்கும் வரையான தொடர் போராட்டமாக இடம்பெறும் எனவும் தெரிவிக்கப்பட்டது. போராட்டம் இடம்பெறும் சமவேளையில் மீனவர்கள் படகுகளில் சென்று இந்திய மீனவர்களின் இழுவைப்படகுகளை கரைக்கு கொண்டு வருவோம் எனவும் முல்லைத்தீவு மீனவர்கள் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

முல்லைத்தீவு கடற்பரப்பில் அண்மைய நாட்களாக இடம்பெறும் இந்திய மீனவர்களின் அத்துமீறிய மீன்பிடி நடவடிக்கைகள் தொடர்பாக விசேட கூட்டம் ஒன்று நேற்று முன்தினம் வியாழக்கிழமை கள்ளப்பாடு கிராமத்தில் இடம்பெற்றது.

இதில் மீன்பிடி சங்கங்களின் பிரதிநிதிகள், மீனவர்கள், முன்னாள் வடமாகாணசபை உறுப்பினர் துரைராசா ரவிகரன் உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டனர். இதன் போது மீன்பிடி அமைச்சர், மீனவர்களை இந்திய படகுகளை கரைக்கு கொண்டு வருமாறும் அதற்கு தான் நடவடிக்கை எடுப்பதாகவும் தெரிவித்ததாக தெரிவித்து நேற்றுக்காலை மீனவர்கள் கடலுக்குச் சென்று இந்திய மீனவர்களை கரைக்கு கொண்டுவரும்நடவடிக்கையை முன்னெடுப்பதாக தெரிவித்தனர்.



சுமார் முப்பது படகுகளுடன் மீனவர்கள் முல்லைத்தீவு கடற்கரையிலும் ஒன்றுகூடினர். சம்பவ இடத்துக்கு முல்லைத்தீவு மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் க.கனகேஸ்வரன், முல்லைத்தீவு மாவட்ட கடற்றொழில் நீரியல் வளத்துறை உதவிப்பணிப்பாளர், உத்தியோகத்தர்கள் வருகை தந்திருந்தனர்.

குறித்த அதிகாரிகளிடம் மீனவர்கள் தமது நிலைமைகளை எடுத்துரைத்தனர். கடற்படையினர் வேடிக்கை பார்ப்பதாகவும் தமது வாழ்வாதாரம் இழந்து தாம் பட்டினிச்சாவை நோக்கிச்செல்வதாகவும் உங்களால் நடவடிக்கை எடுக்க முடியாவிட்டால் சொல்லுங்கள் நாங்கள் சென்று அத்துமீறும் இந்திய மீனவர்களை கரைக்குக் கொண்டு வருகிறோம் எனவும் தெரிவித்தனர்.

இதற்கு மாவட்ட அரச அதிபர் தலைமையில் கடற் படையினரை அழைத்து கலந்துரையாடி ஒரு தீர்வைப் பெற்றுத் தருவதாகவும் அத்தோடு ஆளுநர் மற்றும் கடற்றொழில் அமைச்சர் உள்ளிட்டவர்களுக்கு உங்களுடைய கோரிக்கைகளை உடனடியாகக் கொண்டு செல்வதாகவும் தெரிவித்தனர்.

இந்நிலையில் அதிகாரிகளின் கருத்துக்கு மதிப்பளித்து எதிர்வரும் 15 ஆம் திகதிக்கு முன்னர் தமக்கு ஒரு தீர்வை பெற்றுத்தருமாறும் காலக்கெடு வழங்கினர். தீர்வில்லையேல் 15 ஆம் திகதி மாபெரும் போராட்டம் முன்னெடுக்கவுள்ளதாகவும் இது தீர்வு கிடைக்கும் வரையான தொடர் போராட்டமாக இடம்பெறும் எனவும் போராட்டம் இடம்பெறும் சமவேளையில் மீனவர்கள் படகுகளில் சென்று எல்லை தாண்டும் இந்திய மீனவர்களின் இழுவைப் படகுகளை கரைக்கு கொண்டு வருவோம் எனவும் தெரிவித்து குறித்த இடத்திலிருந்து கலைந்து சென்றனர். (5-4-281)

# வருட இறுதி விவசாய குழுக்கூட்டம்


(மன்னார்)

இவ் வருடத்தின் இறுதி விவ சாயக் குழுக்கூட்டம் நேற்று முன்தினம் மன்னார் மாவட்டச் செயலக கேட்போர் கூடத்தில் அரசாங்க அதிபர் திருமதி. அ.ஸ்ரான்லி டி மெல் தலை மையில் நடைபெற்றது.

இவ் விவசாயக் குழுக் கூட்டத்தில் விவசாயிகளின் குறைநிறைகள் தொடர்பாக விரிவாக ஆராயப்பட்டது.

அந்த வகையில் மாவ ட்ட விவசாயப் பிரிவில் மேற்கொள்ளப்படும் கடமைகளும் முன்னேற்றங்களும், நீர்ப்பாசனத் திணைக்களத்தின் செயற்பாடுகள், கமநல அபிவிருத்தி தொடர்பான செயற்பாடுகள், கட்டுக்கரைகுளதிட்டமுகாமைத்துவகுழு, விவசாயத் திணைக் களத்தின் செயற்பாடுகள், கால்நடை பராமரிப்பு பற்றிய செயற்பாடுகள், வங்கி செயற்பாடுகள் மற்றும் பனை அபிவிருத்திச் செயற்பாடுகள் தொடர்பாக ஆராயப்பட்டது. இக்கூட்டத்திற்கு மேலதிக அரசாங்க அதிபர்கள், திட்டமிடல் பணிப்பாளர், பிரதேச செயலாளர்கள், மாவட்ட விவசாயப்பணிப்பாளர், நீர்பாசன திணைகளத்தின் நீர்ப்பாசன பொறியியலாளர், பல்துறைசார் திணைக்களங்களின் தலைவர்கள் மற்றும் பிரதிநிதிகளும், விவசாய அமைப்புகளின் தலைவர்கள், செயலாளர்; எனப் பலரும் கலந்து கொண்டனர். (5-4-285)

# முன்னேற்பாடாக செயற்பட்டபோதும் பாதிக்கப்பட்ட கடற்றொழிலாளர்



(கண்டாவளை)

பூநகரி கடற்றொழிலாளர்கள், எங்களால் வழங்கப்பட்ட முன்னறிவித்தல்களை ஏற்று பாதுகாப்பாக இருந்தபோதும் எதிர்பாராத விதமாக கடுமையான பாதிப்பு ஏற்பட்டுள்ளதாக கடற்றொழில் திணைக்களத்தின் கிளிநொச்சி மாவட்ட உதவிப் பணிப் பாளர் கா.மோகனகுமார் தெரிவித்துள்ளார்.

அண்மையில் வீசிய புரேவிப் புயல் கிளிநொச்சி, வலைப்பாடு மற்றும் அதனை அண்மித்த கடற் பிரதேசங்களில் கடுமையான பாதிப்புக்களை ஏற்படுத்தியுள்ளது.

இதனால் ஏற்பட்ட சேத விபரங்கள் தொடர்பான மதிப்பீடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இவ்வாறு களவிஜயம் மேற்கொண்டு தகவல்களைத் திரட்டி வரும் நிலையில் அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், கடற்றொழிலாளர்களுக்கு முன்னறிவித்தல்கள் வழங்கப்பட்டிருந்தது. அவர்கள் அதனை ஏற்று பாதுகாப்பாக இருந்த போதும் எதிர்பாராத விதமாக இயற்கை அனர்த்தம் கூடிய பாதிப்பை ஏற்படுத்தியுள்ளது.

அதாவது படகுகள், வலைகள் மற்றும் இந்தப் பிரதேசத்தில் பிரதானமாகக் காணப்படுகின்ற அட்டை வளர்ப்பு, பாசி வளர்ப்பு என்பன முழுமையான பாதிப்புக்களை எதிர்கொண்டுள்ளன.

இவை யாவும் சீரான கடலில் வளர்க்கப்படுகின்றவை. இவ்வாறு வீசிய காற்று, வெள்ளம் என்பவற்றால் பெரும் பாதிப்படைந்துள்ளது என நாங்கள் மேற்கொண்ட கள ஆய்வுகளின் போது தெரிந்து கொண்டோம்.

இது தொடர்பான அழிவு மதிப்பீடுகளை உரிய தொழில்நுட்ப உத்தியோகத்தர்கள் ஊடாக மக்களிடம் திரட்டி வருகின்றோம்.

இந்தப் பிரதேசங்களை சேர்ந்த கடற்றொழிலாளர்களின் படகுகள், வலைகள், வள்ளங்கள் அனைத்தும் பாதுகாப்பாக கரைகளில் வைக்கப்பட்டிருந்தபோதும் அவை கடுமையான சேதங்களுக்கு உள்ளாகியுள்ளன. அட்டைப் பண்ணைகள் முழுமையாக சேதமடைந்துள்ளன.

அதிகளவான பாதிப்புக்கள் என்பதால் மதிப்பீடுகளை மேற்கொள்வதற்கு காலம் தேவைப்படுவதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (5-4-315)

# அரச காடுகளை அபிவிருத்திக்காக பயன்படுத்தத் தீர்மானம்

(கண்டாவளை)

ஒதுக்குக் காடுகள் தவிர்ந்த ஏனைய அரச காடுகளை அபிவிருத்திக்காக பயன்படுத்தும் நோக்கில் பிரதேச செயலாளர்களிடம் கையளிப்பது தொடர்பான கலந்துரையாடல் கிளிநொச்சி மாவட்டச் செயலகத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்றது.

வனஜீவராசிகள் மற்றும் வன பாதுகாப்பு அமைச்சினால் வெளியிடப்பட்ட சுற்றுநிருபம் தொடர்பில் தீர்மானங்களை மேற்கொள்வதன் பொருட்டு கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் தலைமையில் இடம்பெற்ற கலந்துரையாடலில் மாவட்டச்செயலக அதிகாரிகள் பிரதேச செயலாளர்கள் வனவள திணை க்கள அதிகார்ரிகள் மற்றும் துறை சார்ந்த அதிகாரிகளும் கலந்துகொண்டனர்.

இந்த கலந்துரையாடலின் போது முதற்கட்டமாக பிரதேச செயலாளர்களுக்கு கையளிக்கப்பட கூடிய காணிகள் தொடர்பில் பிரதேச செயலாளர்களுடன் வனவள திணைக்கள அதிகாரிகளும் ஏனைய துறை சார்ந்த அதிகாரிகளும் இணைந்து களவிஜயம் ஒன்றினை மேற்கொள்வதன் ஊடாக விடுவிக்கபடக்கூடிய காணிகளை இனங்காண்பதன் மூலம் பொருத்தமான தொடர் நடவடிக்கையை முன்னெடுத்துச் செல்வதற்கான தீர்மானம் மேற்கொள்ளப்பட்டது.

மேலும் பொதுமக்களுக்கு வழங்கப்பட்ட காணிகள் தொடர்பில் ஏற்பட்டுள்ள பிணக்கினை தீர்ப்பதன் நிமிர்த்தம் காணி இனங்காணல் படிமுறையானது இரண்டு வார கால அவகாசத்தினுள் நிறை வேற்றப்பட்டு அடுத்த கட்ட நடவடிக்கைகள் விரைவாக முன்னெடுக்க தீர்மானித்துள்ளதாக கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி றூபவதி கேதீஸ்வரன் தெரிவித்துள்ளார். (5-4-315)

## இராசிபலன்

12.12.2020
கார்த்திகை 27, சனிக்கிழமை
திரயோதசி பின்னிரவு 2.46 மணிவரை
விசாகம் பின்னிரவு 3.21 மணிவரை
சுபநேரம் 3.20-4.30 மணிவரை
இராகுகாலம் 9.20-10.50 மணிவரை
சந்திராஷ்டமம்: அச்சுவினி
சனிப்பிரதோச விரதம்

வளவன்

**மேஷம்** – வெளியூர்த் தொடர்புகள் அனுகூலம் தரும், எடுத்த காரியங்களில் எளிதில் முன்னேற்றம் காண்பீர்கள், உடல் நலன் சீராகும், கடன் பிரச்சினையை சாமர்த்தியமாக சமாளிப்பீர்கள்.

**ரிஷபம்** – உள்ளம் மகிழும் வகையில் உதிரி வருமானங்கள் வந்து சேரலாம், தொழில் சம்பந்தமாக முக்கிய முடிவுகள் எடுப்பீர்கள், சந்தித்தவர்களால் சந்தோசம் கிடைக்கும் நாள்.

**மிதுனம்** – நல்லவர்களின் தொடர்புகள் அதிகரிக்கும் நாள், பாதியில் நின்ற பணியை மீதியும் தொடர்வீர்கள், உறவினர் வழியில் இனிய செய்திகள் வந்து சேரலாம்.

**கடகம்** – மதிப்பும் மரியாதையும் உயரும் நாள், புதிய நபர்களின் அறிமுகம் கிடைக்கும், சுபகாரியப் பேச்சுக்களில் முன்னேற்றம் காண்பீர்கள், மனதில் புதிய சிந்தனைகள் தோன்றும்.

**சிம்மம்** – சிந்தித்து செயற்பட வேண்டிய நாள், உறவினர்களும் நண்பர்களும் வலிய வந்து உதவுவார்கள், சுபகாரியப் பேச்சுக்கள் நல்ல முடிவுக்கு வரும், போசன சுகமுண்டு.

**கன்னி** – இனிய செய்திகள் இல்லம் வந்து சேரலாம், திறமை மிக்கவர்களின் ஒத்துழைப்பு கிடைக்கும், வீட்டுத் தேவைகளைப் பூர்த்தி செய்யும் எண்ணம் உருவாகும், வாக்கு மேன்மையுண்டு.

**துலாம்** – உடல் நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள், மகிழ்ச்சி அதிகரித்து மனமாற்றம் காணும் நாள், கொள்கைப் பிடிப்பைக் கொஞ்சம் தளர்த்தும் நிலை ஏற்படலாம்.

**விருச்சிகம்** – ஆடம்பரப் பொருட்களை வாங்கும் எண்ணம் உருவாகும், குடும்பத்தாருடன் குதூகலம் தரும் பயணங்கள் இடம்பெறலாம், முன்னேற்றம் பெற பெரிதும் பாடுபடுவீர்கள்.

**தனுசு** – தித்திக்கும் செய்திகள் வந்து சேரலாம், பொது வாழ்வில் கௌரவமான சம்பவங்கள் இடம்பெறலாம், இலட்சியப் பாதையில் அடியெடுத்து வைப்பீர்கள், புதிய பொருட்களை வாங்கும் வாய்ப்புண்டு.

**மகரம்** – எண்ணிய காரியம் எளிதில் நிறைவேறும் நாள், நண்பர்கள் சந்திப்பால் மகிழ்ச்சி கூடும் நாள், எதிர்பாராத நேரத்தில் பெரிய மனிதர்களின் ஒத்துழைப்பு கிடைக்கும்.

**கும்பம்** – நேற்றைய பணியொன்று இன்றும் தொடரலாம், தொலைபேசி வழியில் கேட்கும் செய்திகள் மனக்குழப்பத்தை அகற்றும், தொழில் சம்பந்தமாக முக்கிய முடிவுகள் எடுப்பீர்கள்.

**மீனம்** – எதையும் ஒருமுறைக்கு பலமுறை யோசித்துச் செல்வது நல்லது, தேவையற்ற விரயங்கள் ஏற்படலாம், தொழிலில் கூடுதல் பொறுப்புக்கள் வந்து சேரலாம்.

நல்லொழுக்கம் என்பது உனக்கு நீயே அளித்துக் கொள்ளும் நன்மதிப்பாகும்.

# ஆரோக்கியத்தை பாதிக்கும் காரணிகளை இன,மத அடிப்படையில் தீர்மானிக்க முடியாது

## ஒத்துழைப்பு தருமாறு முஸ்லிம்களிடம் வேண்டுகோள்

(கொழும்பு)

**ஆரோக்கியத்தை பாதிக்கின்ற காரணிகளை இனம் மற்றும் மத அடிப்படையில் தீர்மானிக்க முடியாது எனப் பிரதமர் மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.**

பாராளுமன்ற வளாகத்திலுள்ள பிரதமரின் அலுவலகத்தில் நேற்று முன்தினம் வியாழக்கிழமை இந்தச் சந்திப்பு இடம் பெற்றுள்ளது.

கொவிட்-19 வைரஸ் தொற்றினால் உயிரிழந்தவர்களின் உடலை அடக்கம் செய்வதற்கு சுகாதார நிபுணர்களின் பரிந்துரைக்கமைய நிலத்தடி நீர் மட்டம் மிகவும் ஆழமாகக் காணப்படும் வறண்ட நிலப்பரப்பை தெரிவு செய்யுமாறு பிரதமர் இதன்போது ஆலோசனை வழங்கினார்.

இந்த வைரஸ் தொற்றினால் உயிரிழப்பவர்களின் உடலில் வைரஸ் சுமார் 36 நாட்களுக்கு தொடர்ந்து காணப்படும் என சுகாதார அதிகாரிகள் இதன்போது பிரதமரிடம் அறிவித்தனர்.



ஆரோக்கியத்தைப் பாதிக்கின்ற காரணிகளை இனம் மற்றும் மத அடிப்படையில் தீர்மானிக்க முடியாது என சுட்டிக்காட்டிய பிரதமர், சுகாதார வழிகாட்டல்களை கடைப்பிடிப்பதற்கு அனைத்து இன மக்களதும் ஒத்துழைப்பு அவசியம் என்றும் குறிப்பிட்டார்.

மேலும், அதற்கான ஒத்துழைப்பை பெற்றுத்தருமாறு அங்கு வருகை தந்திருந்த முஸ்லிம் அமைச்சர்களிடம் பிரதமர் வேண்டுகோள் விடுத்தார்.

குறித்த சந்தர்ப்பத்தில் அமைச்சர்களான அலி சப்ரி, பவித்ரா வன்னியாராய்ச்சி, ரோஹித அபேகுணவர்தன, வாசுதேவ நாணயக்கார உள்ளிட்ட அமைச்சரவை அமைச்சர்கள் மற்றும் இராஜாங்க அமைச்சர்கள், சுகாதார அமைச்சின் செயலாளர் எஸ்.எம்.முணசிங்க உள்ளிட்ட சுகாதார அமைச்சின் அதிகாரிகள் ஆகியோர் கலந்து கொண்டனர். (நி-4)

# விளையாட்டு துறையின் ஊடாக பொருளாதாரம் கட்டியெழுப்பப்படும்-பசில்

(கொழும்பு)

விளையாட்டுத் துறையை மேம்படுத்தி அதனூடாக பொருளாதாரத்தினை கட்டியெழுப்புவதற்கான வேலைத்திட்டங்களை மேற்கொள்ள எதிர்பார்ப்பதாக பொருளாதார புத்தெழுச்சி மற்றும் வறுமை ஒழிப்புக்கான ஜனாதிபதி செயலணியின் தலைவர் பசில் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

பிரதேச, மாவட்ட மற்றும் மாகாண மட்டத்தில் விளையாட்டு மற்றும் இளைஞர் விவகார அதிகாரிகளுடன் நேற்று முன்தினம் வியாழக்கிழமை அலரி மாளிகையில் இடம்பெற்ற கலந்துரையாடலின்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், "இளைஞர்-யுவதிகளின் விளையாட்டுத் திறனை மேம்படுத்தி விளையாட்டு பொருளாதாரத்தை ஏற்படுத்துவதற்கு சுபீட்சத்தின் நோக்கு கொள்கை திட்டத்தினூடாக எதிர்பார்க்கின்றோம்.

இம்முறை வரவு-செலவுத் திட்டத்தில் இளைஞர் விவகார மற்றும் விளையாட்டுத்துறைக்கென 8264 மில்லியன் ரூபாய் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. வரவு-செலவுத் திட்ட வரலாற்றில் இளைஞர் விவகார மற்றும் விளையாட்டுத்துறைக்கென அதிக தொகை ஒதுக்கப்பட்ட முதலாவது சந்தர்ப்பம் இதுவாகும்.

கொவிட்-19 தொற்றுநிலைமை காரணமாக பொருளாதாரம் பாரியளவில் வீழ்ச்சியடைந்துள்ள சந்தர்ப்பத்தில் லங்கா பிரீமியர் லீக் போட்டியை நடத்துகின்றமை பொருளாதாரத்திற்கு பெரும்பலமாகும்.

கிராம மட்டத்தில் விளையாட்டுமைதானங்களைப்புனரமைக்கும் போது, இளைஞர் விவகார மற்றும் விளையாட்டுத்துறை சார்ந்த அதிகாரிகளின் பூரண ஒத்துழைப்பு அவசியம்.

எதிர்வரும் ஆண்டளவில் கிராம மற்றும்பாடசாலை மட்டத்தில் விளையாட்டுத்துறையில் வளர்ச்சியை எதிர்பார்ப்பதாக தெரிவித்தார்.

அத்துடன், கிராம மட்டத்தில் புனரமைக்கப்படும் விளையாட்டு மைதானங்களில் கிராம உத்தியோகத்தர் பிரிவு மட்டத்திலும் பிரதேச மற்றும் மாவட்ட மட்டத்திலும் விளையாட்டு போட்டிகளை நடத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்வதாகவும் நாமல் ராஜபக்ஷ குறிப்பிட்டார்.

விளையாட்டுத்திறன்கொண்ட கிராம இளைஞர்-யுவதிகளை தேசிய மட்டத்திலிருந்து சர்வதேச மட்டத்திற்கு கொண்டு செல்வது இந்த வேலைத்திட்டத்தின் முதன்மையான நோக்கமாகும் எனவும் அமைச்சர் தெரிவித்தார். (நி-4)

# கடற்படையில் 70 ஆவது ஆண்டு நிறைவு காலிமுகத்திடலில் கடற்படைக் கப்பல்கள்

(காலி)

'இது உங்கள் கடற்படை' மற்றும் 'உங்கள் கடற்படையை அறிந்து கொள்ளுங்கள்' என்ற கருப்பொருளின் கீழ், கடற்படையின் 70 ஆவது ஆண்டு நிறைவு விழாவை முன்னிட்டு இலங்கைக் கடற்படையின் மூலதனக் கப்பல்கள் காலிமுகத்திடல் கடற்பரப்பில் நங்கூரமிடப்பட்டு காட்சிப்படுத்தப்பட்டுள்ளது.

இந்த கப்பல்கள் 13 ஆம் திகதி வரை காலிமுகத்திடல் கடலில் தொடர்ந்து நங்கூரமிட்டு நிறுத்தி வைக்கப்பட்டிருக்கும் என கடற்படை தெரிவித்துள்ளது.

இலங்கையின் கடல்வள முதன்மை காவலனான கடற்படை தனது 70 ஆவது வருட பூர்த்தியை கடந்த புதன்கிழமை வெகு விமர்சையாகக் கொண்டாடியது குறிப்பிடத்தக்கது. (நி-4)

# தடுப்பூசியை பகிரங்கமாக செலுத்திக்கொள்வேன்

# ஐ.நா.சபை பொதுச் செயலாளர் அறிவிப்பு

**(நியூயோர்க்) தடுப்பூசியை பகிரங்கமாக போட்டுக்கொள் வேன், அது எனது தார்மீகக் கடமை என்று ஐ.நா. சபை பொதுச்செயலாளர் ஆன்டனியோ குட்ட ரெஸ் தெரிவித்தார்.**

ஐ.நா.சபை பொதுச்செயலாளர் ஆன்டனியோ குட்டரெஸ், அமெரிக்காவின் நியூயோர்க் நகரில் உள்ள ஐ.நா. தலைமைச் செயலகத்தில் கடந்த புதன்கிழமை ஊடகங்களுக்கு பேட்டி அளித்தார்.

அப்போது அவரிடம், "கொரோனாத் தடுப்பூசி உங்களுக்கு கிடைக்கும்போது அதை பகிரங்கமாக செலுத்திக்கொள்வீர்களா?" என நிருபர்கள் கேள்வி எழுப்பினர்.

அதற்கு அவர், "நிச்சயமாக. தடுப்பூசி எனக்கு கிடைக்கிற போது அதை நான் பகிரங்கமாக பெற்றுக்கொள்ள முடிவு செய்துள்ளேன். பகிரங்கமாக என்று சொல்வதில் எனக்கு எந்த சந்தேகமும் இல்லை" என பதில் அளித்தார்.

தொடர்ந்து அவர் தெரிவிக்கையில்,

தடுப்பூசியை அணுகக்கூடிய அனைவரையும் போட்டுக்கொள்ளுமாறு நான் ஊக்குவிக்கிறேன். ஏனென்றால் இது ஒரு சேவை ஆகும்.

நாம் நமக்கு வழங்குவது மட்டுமல்ல. நாம் ஒவ்வொருவரும் தடுப்பூசி போட்டுக்கொள்வது முழு சமூகத்துக்கும் ஒரு சேவையை வழங்குகிறது. ஏனென்றால், நாம் தொற்று நோயை இனிப் பரப்புவது இல்லை. நோய் பரவும் ஆபத்தும் இல்லை. எனவே தடுப்பூசி போட்டுக்கொள்வது என்பது நம் அனைவருக்கும் தார்மீகக் கடமை ஆகும்.



தடுப்பூசி உலகளாவிய பொது நன்மைக்காக எல்லா இடங்களிலும் குறிப்பாக ஆப்பிரிக்க நாடுகளிலும் கிடைக்க வேண்டும் என அவர் தெரிவித்தார். (நி)

# இஸ்லாமியவாத குழுக்களை கட்டுப்படுத்தும் சட்டமூலத்திற்கு பிரான்ஸ் ஒப்புதல்

(பாரிஸ்)

தொடர் தீவிரவாத தாக்குதல்களையடுத்து தீவிர இஸ்லாமியவாத குழுக்களை எதிர்கொள்ளும் வகையில் கொண்டுவரப்படும் சட்டமூலத்துக்கு பிரான்ஸ் அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது.

இந்த சட்டத்தினை 'பாதுகாக்கும் சட்டம்' என்று கூறும் பிரதமர் ஜீன் காஸ்டெக்ஸ், இது தீவிர முஸ்லிம் குழுக்களின் பிடியில் இருந்து முஸ்லிம்களை விடுவிக்கும் என விளக்கம் அளித்துள்ளார்.




எனினும், இந்த சட்டத்தின் மூலம் பிரான்ஸ் அரசாங்கம் ஒரு குறிப்பிட்ட மதத்தை குறிவைப்பதாக, பிரான்ஸிலும் வெளிநாட்டில் இருந்தும் விமர்சனங்கள் எழுந்துள்ளன. (நி-4)

# ராஜஸ்தான் வைத்தியசாலையில் ஒன்பது குழந்தைகள் உயிரிழப்பு!

(டில்லி)

ராஜஸ்தானில் உள்ள அரசு வைத்தியசாலையில் புதிதாக பிறந்த 9 சிசுக்கள் அடுத்தடுத்து உயிரிழந்துள்ளதாக தெரியவந்துள்ளது.

சிசுக்களின் திடீர் மரணம் சர்ச்சையை ஏற்படுத்திய நிலையில் அந்தக் குழந்தைகள் எந்தவித பாதிப்புக்கும் ஆளாகி உயிரிழக்கவில்லை என்றும் இது இயற்கை மரணம்தான் எனவும் வைத்தியசாலை கண்காணிப்பாளர் தெரிவித்துள்ளார்.

இந்தச் சம்பவம் குறித்து விசாரணை நடத்துமாறு மாநில சுகாதாரத் துறை அமைச்சர் அதிகாரிகளுக்கு உத்தரவிட்டுள்ளார்.

கடந்த ஆண்டு டிசெம்பர் மாதத்தில் இதே வைத்தியசாலையில் 100 இற்கும் மேற்பட்ட குழந்தைகள் உயிரிழந்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (நி-4)

# சீனாவில் இருந்து அபுதாபிக்கு 20 லட்சம் தடுப்பூசி மருந்துகள்



(அபுதாபி)

சீனாவிலிருந்து அபுதாபிக்கு 20 இலட்சம் கொரோனா தடுப்பூசி மருந்துகள் கொண்டுவரப்பட்டுள்ளதாக அபுதாபி சுகாதாரத்துறை தலைவர் ஷேக் அப்துல்லா பின் முகம்மது அல் ஹமத் தெரிவித்துள்ளார்.

இரண்டாம் கட்டமாக போடப்படும் தடுப்பூசி மருந்துகள் சீனாவில் இருந்து அமீரகத்திற்கு கொண்டு வருவதற்கு உதவியாக இருந்த தனியார்துறை நிறுவனங்களுக்கு பாராட்டையும் நன்றியையும் இதன்போது அவர் தெரிவித்தார்.

வெப்பநிலையை பராமரிக்க சிறப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்ட போயிங் 777-300 இ.ஆர். என்ற சரக்கு விமானம் மூலம் இந்த தடுப்பு மருந்துகள் கொண்டுவரப்பட்டன.

குறிப்பிட்ட வெப்பநிலையில் சினோபார்ம் மருந்தை பராமரித்தால்தான் அதன் தன்மை மாறுபடாது என்பதால் இந்த ஏற்பாடு செய்யப்பட்டு இருந்தது.

அபுதாபி சர்வதேச விமான நிலையத்தில் இருந்து அபுதாபி துறைமுகத்தில் உள்ள கிசாட் குளிரூட்டப்பட்ட சேமிப்பு மையத்தில் அந்த மருந்துகள் பாதுகாப்பாக பராமரிக்கப்பட உள்ளது. இந்த கொரோனா தடுப்பு மருந்தை அமீரகத்திற்கு கொண்டு வருவதற்கு ஹோப் கன்சோர்டியம் என்ற நிறுவனம் ஏற்பாடு செய்திருந்தது.

குளிரூட்டும் சேமிப்பு மையத்தில் பராமரிக்கப்படும் மருந்துகள் தேவைக்கேற்ப நாடு முழுவதும் விநியோகம் செய்ய ஏற்பாடு நடைபெற்று வருகிறது. (நி-4)

# ஆப்கானில் பெண் நிருபர் சுட்டுக் கொலை



(காபூல்)

ஆப்கானிஸ்தானில் தனியார் தொலைக்காட்சியில் பணியாற்றிய பெண் நிருபர் மலாலா மைவாண்ட் சுட்டுக்கொல்லப்பட்ட சம்பவம் அதிர்ச்சியை ஏற்படுத்தி உள்ளது.

ஆப்கானிஸ்தானில் உள்ள தனியார் தொலைக்காட்சியில் பெண் நிருபராக வேலைபார்த்தவர் மலாலா மைவாண்ட். இவர் பணி விடயமாக ஜலாலாபாத் நகருக்கு காரில் சென்றபோது காரை மறித்த மர்மநபர்கள் துப்பாக்கியால் பெண் நிருபரை சரமாரியாக சுட்டனர். மேலும் கார் சாரதியையும் சுட்டனர். இதில் இருவரும் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தனர்.

கடந்த ஒரு மாதத்தில் ஆப்கானிஸ்தானில் 2 ஆவது பத்திரிகையாளர் கொல்லப்பட்டுள்ளார். இந்த கொலைக்கு எந்த அமைப்பும் இதுவரை பொறுப்பேற்கவில்லை. (நி-4)

# நிலவுக்குச் செல்லும் வீரர்கள் பெயரை வெளியிட்டது நாசா

## இந்திய வம்சாவளி வீரரும் உள்ளடக்கம்

(வோஷிங்டன்)

இரண்டாவது முறையாக நிலவுக்கு செல்லும் இந்திய வம்சாவளியை நேர்ந்த ராஜா சாரி உள்ளிட்ட 18 வீரர்களின் பெயர்களை அமெரிக்க விண்வெளி ஆய்வு மையமான நாசா அறிவித்துள்ளது.

இந்நிலையில், அமெரிக்காவின் ஆர்டெமிஸ் திட்டத்தின் கீழ் 2ஆவது முறையாக நிலவுக்கு செல்லும் 18 வீரர்களின் பெயர்களை அமெரிக்க விண்வெளி ஆய்வு மையமான நாசா அறிவித்துள்ளது.

இரண்டாவது முறையாக, நிலவுக்கு வீரர்களை அனுப்பும் முயற்சியில் நாசா ஈடுபட்டு வருகிறது. இதற்கு ஆர்டெமிஸ்



என பெயரிடப்பட்டுள்ளது. இதற்காக 18 விண்வெளி வீரர்களை தேர்வு செய்து அவர்களுக்கு நாசா பயிற்சி அளிக்க உள்ளது.

இந்திய வம்சாவளியை சேர்ந்த ராஜா சாரி என்பவர் உட்பட 9 ஆண் மற்றும் 9 பெண்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு உள்ளனர். அவர்களை துணை ஜனாதிபதி மைக் பென்ஸ், புளோரிடாவில் உள்ள கென்னடி விண்வெளி நிலையத்தில் அறிமுகப்படுத்தினார். (நி-4)

# 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

மலர்வு

29 – 07 – 1930



உதிர்வு

12 – 11 – 2020

**நன்றி நவில்கின்றோம்**

"எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம்
உய்வில்லை செய்நன்றி கொண்ட மகற்கு"

வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்து வானுறையும் தெய்வத்துடன் கலந்துவிட்ட எமது அன்புத் தெய்வமாகிய

## அமரர். திரு. கோணையா தியாகராஜா

அவர்கள் இறையடி எய்திய செய்தி அறிந்து உளம் வருந்தி தொலைபேசியூடாக அனுதாப வார்த்தைகளைப் பகிர்ந்து கொண்டோருக்கும், நேரில் கலந்து கொண்டோருக்கும், பதாகைகள், கண்ணீர் அஞ்சலிப் பிரசுரங்கள், மலர் வளையங்கள் மூலம் அனுதாபங்களைத் தெரிவித்தவர்களுக்கும், இறுதிக்கிரியைகளில் இணைந்து உதவியவர்களுக்கும், அந்தியேட்டி, வீட்டுக்கிரியைகள், ஆத்மசாந்திப் பிரார்த்தனையில் கலந்து கொண்டவர்களுக்கும் இறையடி எய்திய நாளிலிருந்து இன்றுவரை சகல வழிகளிலும் உதவி புரிந்த அனைத்து உள்ளங்களுக்கும் அன்னாரது 31 ஆம் நாள் நினைவு மலரினைச் சிறப்பாக அச்சிட்டுத்தந்த எவக்கீறின் அச்சகத் தாருக்கும் எமது இதயம் கனிந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

நன்றி

"இருந்தாலும் பிறந்தாலும் பெயர் சொல்ல வேண்டும்
இவர் போல யாரென்று ஊர் சொல்ல வேண்டும்"

என்ற கவிதை வரிகளை மெய்யாக்கி வாழ்ந்து காட்டி, எம் குடும்ப விருட்சத்திற்கு நீராகி, வேராகி, எங்கள் குடும்பத்தின் குலவிளக்காவும், எமது வாழ்வுக்காவும், வளர்ச்சிக் காகவும் தன்னையே உருக்கி ஒளி கொடுத்த மெழுகுவர்த்தியாகவும், அளவற்ற அன்பைப் பொழிந்த கருணைக்கடலாகவும் விளங்கி, பொது வாழ்விற்காகத் தன்னையே அர்ப்பணித்து, எமது நெஞ்சத்து நினைவுகளைச் சுமந்தவண்ணமே இறைவன் திருவடிகளை அடைந்துவிட்ட எங்கள் உயிரினும் மேலான அன்புத் தெய்வத்திற்கு இதய அஞ்சலியைச் சமர்ப்பிக்கின்றோம்.

இல.27, புது வீதி,
கொய்யாத்தோட்டம்,
யாழ்ப்பாணம்.

குடும்பத்தினர்.

# ஒரு இலட்சம் பேர் வீட்டுத் தனிமைப்படுத்தலில்



(கொழும்பு)

நாடு முழுவதும் சுமார் ஒரு இலட்சம் பேர் வீட்டுத் தனிமைப்படுத்தலில் வைக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

அதன்படி நேற்று வரை 95,825 பேர் வீட்டுத் தனிமைப்படுத்தலில் வைக்கப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளரும், பிரதிப் பொலிஸ்மா அதிபருமான அஜித் ரோஹண தெரிவித்துள்ளார்.


கம்பஹா மாவட்டத்திலேயே அதிகளவானர்கள் வீட்டுத் தனிமைப்படுத்தலில் உள்ளனர்.

இதேவேளை வீட்டுத் தனிமைப்படுத்தலில் உள்ள அனைவரும் அவசியம் தனிமைப்படுத்தல் விதிமுறைகளை மற்றும் சுகாதார அதிகாரிகளின் ஆலோசனைகளை பின்பற்றுவதை உறுதி செய்ய வேண்டும்.

இவ்வாறு தனிமைப்படுத்தலில் உள்ளவர்கள் ஏதேனும் அவசர தேவைகள் இருந்தால் வீட்டுச் சுவரில் ஒட்டப்பட்டுள்ள அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ள எண்களை தொடர்பு கொள்ளலாம்.

வீட்டுத் தனிமைப்படுத்தப்பட்ட விதிகளை மீறுபவர்கள் அபராதம் மற்றும் மூன்று ஆண்டுகள் சிறைத்தண்டனை உள்ளிட்ட சட்ட நடவடிக்கைகளை எதிர்கொள்ள வேண்டும் என்றும் பிரதிப் பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண மேலும் கூறினார். (நி-4)

# பாராளுமன்ற சின்னத்துடன் பொய்யான தகவல்கள் ஏற்க முடியாது என்கிறார் சஜித்



(கொழும்பு)

பாராளுமன்ற சின்னத்தை பயன்படுத்தி பொய்யான தகவல்களை ஊடகங்கள் பரப்புவது ஏற்றுக்கொள்ள முடியாத காரணியாகும், கோப் குழுவின் தகவல்களை திரிபுபடுத்தி ஊடகங்கள் வெளியிட்டுள்ள காரணத்தினால் பாராளுமன்ற ஊடக குழுவிற்கு எதிராக உடனடி விசாரணைகளை நடத்த வேண்டும் என எதிர்க்கட்சியினர் சபையில் சர்ச்சையை உருவாக்கினர்.

பொய்யான தகவல்களை பாராளுமன்ற செய்திப்பிரிவு பிரசுரிக்கின்றது என்றால் அதற்கு சபாநாயகரும் பாராளுமன்ற செயலாளரும் பொறுப்புக்கூற வேண்டும் என எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாஸ குற்றம் சுமத்தினார்.

கோப் குழு நேற்று முன்தினம் பாராளுமன்றத்தில் கூடிய வேளையில் முன்னைய ஆட்சியில் முன்னெடுக்கப்பட்ட கூகுள் பலூன் விவகாரம் குறித்த விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டிருந்தன.

இதன்போது தோல்வியில் முடிந்த கூகுள் பலூன் திட்டத்திற்கு 8.2 மில்லியன் ரூபாய்கள் செலவழிக்கப்பட்டதாக பாராளுமன்ற ஊடகப் பிரிவு செய்தி வெளியிட்டுள்ளதாக பாராளுமன்ற சின்னத்தை பயன்படுத்தி பிரதான ஊடகம் சில செய்திகளை வெளியிட்டுள்ள நிலையில் நேற்று முன்தினம் சபையில் இது குறித்த பாரிய சர்ச்சை ஒன்று வெடித்தது.

பாராளுமன்றத்தின் சின்னத்துடன் ஒரு செய்தி வெளியிடப்படுகின்றது என்றால் அது குறித்து முதலில் சபாநாயகர் தெரிந்து கொள்ள வேண்டும். பாராளுமன்ற செயலாளரும் அதனை தெரிந்துகொள்ள வேண்டும்.

எனவே இது மிகவும் மோசமான செயற்பாடு. எனவே இது குறித்து சுயாதீன விசாரணையை நடத்தியாக வேண்டும். இன்று சபை முடிய முன்னர் இந்த தவறை செய்தவர்கள் யார் என்பதை சபைக்கு தெரிவிக்க வேண்டும் என்றார்.

எதிர்க்கட்சியினர் தொடர்ச்சியாக சபையில் தமது எதிர்ப்பை வெளிப்படுத்தியதுடன் பாராளுமன்ற சின்னங்களை பயன்படுத்தி அரசியல் செய்யும் ஆளும் கட்சியின் செயற்பாடுகளை நடத்த வேண்டாம்.

உடனடியாக இதற்கான நியாயமான விசாரணைகளை நடத்தி நடவடிக்கை எடுக்க வேண்டும் என எதிர்க்கட்சி தலைவர் மீண்டும் வலியுறுத்தினார். இதற்கான விசாரணைகளை நடத்த முடியும் என சபாநாயகர் வாக்குறுதியளித்தார். (நி-4)




## கனிமொழி

பொய் பேசுபவனுக்கு கிடைக்கும் பெரிய தண்டனை...



அவன் உண்மையை பேசும் போது யாரும் நம்பாமல் போவது...!


## மீரா



ஏழைக்கு உதவி செய்ய போகும் போது கமராவை வீட்டிலே விட்டு விடு...!

## நிசாந்தன்

முன்னாடி இருக்கிறவனும் தூங்குறான்
பின்னாடி இருக்கிறவனும் தூங்குறான்
யாரைத்தான் பாத்து எழுதுறது பேசம
நாமளும் தூங்கிட வேண்டியது தான்..!



## மயூரா

உன்னைப் புரிந்தவனுக்கு நல்ல பதிலாக இரு...!



உன்னை புரியாதவருக்கு புதிராகவே இரு...!

## கார்த்தி


கணவன் அடிச்சா பெண்கள் பொலிஸ் நிலையம் போறாங்க
மனைவி அடிச்சா ஆண்கள் மதுக்கடைக்கு போறாங்க...!



நீதி :- ஆண்களுக்கு பழிவாங்கும் எண்ணம் கிடையாது..

## துரை

மழையில நனைஞ்ச மண்ணும் மனசில நெனச்ச பொண்ணும்...



கண்டிப்பா ஒரு நாள் கால வாரி விடும்..

நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

# உயிரிழந்த கைதிகள் அடையாளம் காணப்பட்டனர்

(கொழும்பு)

மகர சிறைச்சாலை களேபரத்தில் உயிரிழந்த கைதிகள் அனைவரும் அவர்களது குடும்பத்தினரால் அடையாளம் காணப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப்பேச்சாளர் பிரதிப் பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண தெரிவித்தார்.

இதேவேளை உயிரிழந்த கைதிகளின் மரண பரிசோதனைகளுக்காக அரச விசேட வைத்தியர்கள் நால்வர் உட்பட அரச இரச பரிசோதகர் ஒருவரும் உள்ளடங்கலாக ஐவர் அடங்கிய குழு நியமிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறியுள்ளதாவது,

மகர சிறைச்சாலையில் கடந்த மாதம் 29 ஆம் திகதி இடம்பெற்ற களேபரத்தில் 11 கைதிகள் உயிரிழந்திருந்தனர். இவர்களின் சடலங்கள் ராகமை வைத்தியசாலையின் பிரேத அறையில் வைக்கப்பட்டிருந்த நிலையில் சம்பவம் தொடர்பில் குற்றப்புலனாய்வு பிரிவினரின் தலைமையில் விசாரணைகளும் இடம்பெற்று வருகின்றன.


இதன்போது உயிரிழந்த கைதிகளின் சடலங்களில் மூன்று கைதிகளின் சடலங்கள் முன்னரே அடையாளம் காணப்பட்டிருந்ததுடன், நேற்று முன்தினம் ஏழு சடலங்களை உறவினர்கள் அடையாளம் கண்டிருந்தனர். இந்நிலையில் நேற்று எஞ்சிய நான்கு சடலங்களும் உறவினர்களால் அடையாளம் காணப்பட்டுள்ளது.

இந்நிலையில் உயிரிழந்த கைதிகள் மினுவாங்கொட, பியகம, ஜாஎல, சப்புகஸ்கந்த, களனி, வெலிவேஹர, அங்குராந்தொட்ட மற்றும் வத்தளை ஆகிய பகுதிகளைச் சேர்ந்தவர்கள் என்றும், இவர்கள் அனைவருமேபோதைப் பொருள் தொடர்பான குற்றச்சாட்டின் பேரில் இவ்வாறு சிறை வைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (நி-4)

# யானைகளின் மரணம் அதிகளவில் இடம்பெறும் நாடாக இலங்கை

(கொழும்பு)

**யானைக்கும் மனிதனுக்கும் இடையில் இடம்பெறும் மோதல் காரணமாக, உலகில் யானைகளின் மரணம் அதிகளவில் இடம்பெறும் நாடாக 'இலங்கை பதிவாகியுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.**



அரச கணக்குகள் பற்றிய தெரிவுக் குழுவில் இந்தத் தகவல் வெளியிடப்பட்டுள்ளது.

இதேநேரம், யானை - மனித மோதல் காரணமாக உலகில் அதிகளவான மனித மரணங்கள் இடம்பெறும் நாடுகளில் இலங்கை இரண்டாவது இடத்தில் பதிவாகியுள்ளது.

யானை - மனித மோதல் காரணமாக உலகில் அதிகமான மனிதர்களின் மரணம் இடம்பெறும் முதலாவது நாடாக இந்தியா பதிவாகியுள்ளதாகவும் தகவல் வெளியிடப்பட்டுள்ளது.

யானை மனித மோதல் காரணமாக வருடமொன்றுக்கு 272 யானைகள் மரணிக்கின்ற நிலையில், கடந்த வருடம் 407 யானைகள் மரணித்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேநேரம் வருடமொன்றுக்கு 85 மனிதர்கள் மரணிக்கின்ற நிலையில், கடந்த ஆண்டு அந்த எண்ணிக்கை 122 ஆக அதிகரித்துள்ளதாக தகவல் வெளியிடப்பட்டுள்ளது. (நி-4)

# இராணுவ தலைமை அதிகாரியாக மேஜர் ஜெனரல் பிரபாத்

(கொழும்பு)

இராணுவ தலைமை அதிகாரியாக மேஜர் ஜெனரல் பிரபாத் தெமட்டன்பிட்டிய நியமிக்கப்பட்டுள்ளார்.

எதிர்வரும் 15 ஆம் திகதி முதல் அமுலுக்கு வரும் வகையில் இந்த நியமனம் வழங்கப்பட்டுள்ளது.

இராணுவ தலைமை அதிகாரியாக செயற்பட்ட மேஜர் ஜெனரல் ஜகத் குணவர்தன ஓய்வுபெறும் நிலையில் இந்த நியமனம் வழங்கப்பட்டுள்ளது. (நி-4)



# இன்று ஒரு தகவல்

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

## கலைவாணர்

ஒரு தடவை கலைவாணர் என்.எஸ்.கிருஷ்ணன் பேராசிரியர் கல்கியைச் சந்தித்து பேசிக் கொண்டிருந்தாராம். கலைவாணர் கல்கியைப் பார்த்து... எனக்கு கதை எழுத ஆசையாக இருக்கு. எப்படி எழுதுவது என்று கேட்டாராம்.

கதை எழுதுவதற்கு நான்கு மை வேண்டும் என்றாராம் கல்கி. அப்படியா? அப்படி என்றால் என்ன என்ன கலர் மை வேண்டும்? என்று கேட்டார் கலைவாணர் சிரித்துக் கொண்டே.

கலர் மை இல்லை நான் சொன்னது. அது வேறு மை. அதாவது ஒன்று திறமை, இரண்டு போனா மை, மூன்று தனிமை, நாலு பொறுமை என்றார்.

உடனே கலைவாணர், உங்கள் யோசனை அருமை என்றார். அதுதான் கலைவாணர். பொதுவாக எழுத்தாளர்கள் எழுதுகின்ற மாதிரி நடந்து கொள்வதில்லை. ஆனால் கலைவாணர் என்ன சொல்லுவாரோ அதே மாதிரி நடப்பார்.

எல்லோருக்கும் எல்லாம் கிடைக்க வேண்டும் என்னும் கருத்தை சினிமா படங்களிலே வலியுறுத்துவார். அதே மாதிரி நடைமுறை வாழ்க்கையிலேயும் எல்லோருக்கும் எல்லாமும் கொடுப்பார்.

பணம்- பதவி-புகழ் இப்படி எதுவுமே இல்லாத ஒரு சாதாரண மனிதனாக இருந்தால் கூட-இவர் மனிதனுக்குக் கொடுக்கின்ற மரியாதையிலே கொஞ்சமும் குறைச்சல் இருக்காது.இந்த குணம் சாதாரணமாக எல்லோருக்கும் இருப்பதில்லை.

அவர் சினிமா தியேட்டருக்குப் போய் சினிமா பார்ப்பார் அவர் வந்திருக்கின்றார் என்பது தெரிந்தால் வெளியே பிச்சைக்காரர்கள் வந்து கூடிவிடுவார்கள்.இது அவருக்குத் தெரியும். வெளியே நம்மளை நம்பி ஒரு கூட்டம் காத்துக் கொண்டிருக்குமே என்று நினைப்பார். உடனே ஒரு நூறு ரூபாய் நோட்டை குடுத்து சில்லறையாக மாற்றிக் கொண்டு வரச் சொல்லுவார். படம் முடிந்து வெளியே வருகின்ற பொழுது சில்லறையோட வருவார். எல்லோரும் அருகில் வருவார்கள்.

என்ன எல்லோரும் சௌக்கியமாக இருக்கின்றீர்களா? என்று பிரியமாக விசாரிப்பார். ஏதோ மிகவும் நெருங்கிய சொந்தக்காரர்களை விசாரிக்கின்ற மாதிரி விசாரிப்பார். தன்னிடம் இருக்கின்ற சில்லறையை எல்லோருக்கும் சமமாக பிரித்து கொடுத்துவிட்டுத்தான் அங்கேயிருந்து புறப்படுவார்.ஒரு நாள் அது மாதிரி புறப்படுகின்ற சமயத்திலே ஒரு சின்ன பையனுக்கு சில்லயை ஏதும் கிடைக்கவில்லை..இது கலைவாணருக்கு தெரியாது.. காரிலே ஏறி புறப்பட்டுவிட்டார்.அந்தப் பையன் காரைப் பிடித்துக் கொண்டே பின்னாடியே ஓடிவந்தான்.ஐயா..நீங்கள் இல்லை என்று சொன்னால் நான் என்ன செய்வேன் இன்றைக்கு பட்டினி தான். அம்மாவுக்கு வேறு உடம்பு சரியில்லை.. என்று கத்திக் கொண்டே ஓடி வந்தான். கலைவாணர் கவனித்துவிட்டார். உடனே காரை நிறுத்தச் சொன்னார். அந்த சின்னப் பையனைக் கட்டிப் பிடித்துக் கொண்டு என்னை மன்னித்து விடு, நான் கவனிக்காமல் வந்துவிட்டேன்.என்று சொல்லி அழ ஆரம்பித்துவிட்டார்.

இன்னொரு தடவை இதே மாதிரி ஒரு தியேட்டரிலிருந்து வெளியே வந்திருக்கின்றார். ஒரு ஆள் அவரிடம்வந்து நின்றார். அவனுக்குக் கொடுப்பதற்கு இவரிடம் பணம் இல்லை.பணம் இல்லையப்பா என்றிருக்கின்றார்.

உங்களிடம் இல்லையா? என்றிருக்கின்றார். கலைவாணருக்கு மனதுக்கு,மிகவும் சங்கடமா போய்விட்டது.

உடனே புறப்பட்டு வீட்டுக்குப் போனார். அங்கே இங்கே தேடிப் பார்த்து இருந்த கொஞ்ச சில்லறையை எடுத்தார். கார்டிரைவரைக் கூப்பிட்டார். தியேட்டா- வாசனிலே நின்று கொண்டிருந்த ஆசாமியின் அங்க அடையாளங்களைச் சொன்னார். காரை எடுத்துக் கொண்டு போய் அந்த ஆளைக் கண்டு பிடித்து இந்த காசை கொடுத்துவிட்டு வா என்று அனுப்பினார்.

பிச்சை போடுவதற்காக காரை அனுப்பியதாக வேறு யாரைப் பற்றியாவது நீங்கள் கேள்விப்பட்டிருக்கின்றீர்களா? அவர் ஒரு வித்தியாசமான மனிதர்-வித்தியாசமான கலைஞர்.கலைவாணருடைய சகோதரர் கல்யாணம் நடந்தது.அதிலே தியாகராஜ பாக்வதர் கச்சேரி. கச்சேரி முடிந்தவுடனே அதிலே சம்பந்தப்பட்ட கலைஞர்களுக்கெல்லாம் கலைவாணர் பரிசுகள் வழங்கினார்.

அந்தக் கச்சேரியில் கடம் வாசித்தவருக்கு மட்டும் வேறு எல்லோருக்கும் கொடுத்ததை விட பெரிதாக ஒரு வெள்ளிக் கோப்பையை பரிசாக கொடுத்தார்.

மற்றவர்களுக்கெல்லாம் சின்னதாக கொடுத்துவிட்டு கடம் வித்துவானுக்கு மட்டும் பெரிதாக பரிசு கொடுக்கின்றீர்களே என்று கேட்டிருக்கின்றார்கள். அதற்கு கலைவாணர் விளக்கம் கொடுத்தார்.

இப்பொழுதெல்லாம் புகையிரதத்திலே கூட்டம் அதிகம் என்பது உங்களுக் கெல்லாம் தெரியும். இந்த வித்துவான்.. இவ்வளவு பெரிய மண்பானையை புகையிரத்தில் மிகவும் பத்திரமாக உடையாமல் மிகவும் தூரத்திலிருந்து கொண்டு வந்திருக்கவில்லை.. அது என்ன சாமன்ய காரியமா? அவருடைய அந்த சாமர்த்தியத்தைப் பாராட்டுவதற்குத் தான் அவருக்கு இவ்வளவு பெரிய பரிசு..என்றார்.

## சூழலுக்கியைவான பசுமைத் தொழில்நுட்பங்கள்–223

# 6வது உலகளாவிய உலர்வலய விவசாய மாநாடு 30 ஆவது அகவையும் விவசாய பீடத்தில்!




பேராசிரியர் கு.மிகுந்தன்
விவசாய உயிரியல்துறை
விவசாய பீடம்
யாழ்.பல்கலைக்கழகம்


**வாருங்கள் எம்மினிய உறவுகளே!**

கடந்த 3 ஆம் திகதி யாழ்ப்பாணப் பல்கலைக்கழக விவசாய பீடத்தின் முப்பதாவது அகவையும்ஆறாவது உலகளாவிய உலர்வலய விவசாய மாநாடுமாக விவசாய பீடம் களைகட்டியிருந்தது. கொரோனா காலத்தில் மாணவர்களின் பிரசன்னமின்றியே இவையனைத்தும் நடந்தேறியிருக்கின்றன. குறிப்பாக புரேவி சூறாவளி இலங்கை யின் வடபகுதியை புரட்டிப்போட்ட போதும் விவசாய பீடத்தில் குறித்த நிகழ்வுகள் பீடாதிபதி கலாநிதி சூரியகுமாரின் தலைமையில் சிறப்பாக நடந்தேறியிருக்கின்றது. மேலும் முதலாம் நாள் புரேவி சூறாவளியின் தாக்கம் அதிகமாக இருந்தபோதும் திட்டமிட்டபடி நிகழ்வுகள் யாவும் நடைபெற்றன. யாழ்ப்பாணப் பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் சிவக்கொழுந்து சிறிசற்குணராஜா நிகழ்வுகளின் பிரதம விருந்தினராக கலந்து கொண்டார். சிறப்பு விருந்தினராக விவசாய அமைச்சின் விவசாய அபிவிருத்திக்கான மேலதிக செயலாளர் கலாநிதி W.L.G. சமரசிங்க உயிர்ப்பல்வகைத்தன்மை மற்றும் விதை மூலங்களைப் பாதுகாத்தலும் பற்றி இணையவழியாக கலந்து கொண்டு உரையாற்றினார். நிகழ்வில் பேராசிரியர்கள், விரிவுரையாளர்கள் என பலரும் பங்குபற்றினர். மாணவர்கள் சார்பில் விவசாய மாணவ ஒன்றியத்தின் தலைவரும் செயலாளரும் கலந்து கொண்டனர்.

விவசாய பீடம் 1990ஆம் ஆண்டு 3ஆம் திகதி மறைந்த பேராசான் முன்னாள் துணைவேந்தர் துரைராஜாவினால் ஆரம்பிக்கப்பட்டது. முப்பது வருடங்கள் கழிந்து இதே தினத்தில் அவரது கொள்கைகளை பின்பற்றி பதவியேற்ற தற்போதய துணைவேந்தர் பேராசிரியர் சிறிசற்குணராஜாவினால் அதனது 6வது உலகளாவிய மாநாட்டை ஆரம்பித்து வைத்ததுடன் அதனது 30வது அகவையினையும் அதற்குரிய சிறிய விழாவுடன் கேக்வெட்டி ஆரம்பித்து வைத்துள்ளார். தொடர்ந்து இருநாட்களாக நடைபெற்ற இம்மாநாடு பல ஆய்வுக்கட்டுரைகளை உள்வாங்கி அதனை இணையவழி மூலம் அதன் ஆய்வாளர்களை பிரசன்னமாக வைத்து அதன் முழுமையை செய்திருக்கின்றது. இந்த ஆய்வுக் கட்டுரைகளை விவசாய பீடத்தின் இணையத்திற்கு சென்று அறிந்து கொள்ளலாம்.

விவசாய பீடம் தனது வளர்ச்சியை மேன்மேலும் உயர்த்தி அதனது இருப்பை இங்குள்ள இளையவர்களை மேற்படிப்புக்காக வெளிநாட்டு பல்கலைக்கழகங்களுக்கு அனுப்பி அவர்களை புலமையாளர்களாக கலாநிதிகளாக உருவாக்கியிருக்கின்றது. அந்த பெருமையுடன் இன்னும் மேன்மேலும் வளர அரும்பாடுபடும் இப்பீடம் மக்களுக்கான அனைத்து தேவைகளையும் செய்து கொடுக்கும் பீடமாக மிளிர இருக்கின்றது. இப்பீடம் உருவாக்கிய விவசாய பட்டதாரிகள் பாரெங்கும் பரந்து பல சிறப்பான பதவிகளில் மிளிர்ந்து கொண்டிருக்கின்றார்கள் என்பதனை மகிழ்சியுடன் இதில் பதிவு செய்வதில் மகிழ்ச்சியடைகின்றேன். இப்பீடத்திற்காக பலர் உழைத்திருக்கின்றார்கள் ஆனால் பலரும் தமது வாழ்க்கையை முழுவதுமாக இதில் கழித்துமிருக்கின்றார்கள். எந்தவிதமான கட்டடமோ அல்லது வசதிகளோ இல்லாமல் ஆரம்பித்த விவசாய பீடம் தற்போது பலகட்டங்களையும் ஆய்வு கூடங்களையும் தன்னகத்தே கொண்டு வானுயர்ந்திருக்கின்றது.

விவசாய பீடத்தில் பல்லின மக்களும் கல்விகற்கும் வசதிகளும் அவர்களுக்கான வதிவிடங்களும் உருவாக்கப்பட்டிருக்கின்றன. இப் பீடத்தின் வளர்ச்சியில் முன்னைநாள் துணைவேந்தரான பேராசிரியை வசந்தி அரசரட்ணம் அவர்களின் பங்களிப்பு அளப்பரியது. பீடத்தில் பீடாதிபதிகளாக மிளிர்ந்த பேராசிரியர்களான கந்தையா, நவரட்ணராஜா, மோகனதாஸ், எந்திரி விஜயரட்ணம், ராஜதுரை மற்றும் பீடத்தில் ஆரம்பத்தில் இணைந்து கொண்ட சிவமதி சிவச்சந்திரன், மிகுந்தன், மற்றும் துஸ்யந்தி மிகுந்தன் ஆகியோர் பீடாதிபதிகளாக பணிபுரிந்தார்கள் என்பதைக் காட்டிலும் பங்களித்திருக்கின்றார்கள் என்பது பொருந்தும். இப்பீடத்தில் ஆரம்பத்தில் இணைந்து பின்னர் வவுனியா வளாகத்தில் இணைந்து இடைநடுவில் எம்மை விட்டுப்பிரிந்த புவனேஸ்வரி லோகநாதனையும் இந்த தருணத்தில் நினைவூட்டுவது சாலப்பொருந்தும். பேராசிரியர் நவரட்ணராஜாவினைத் தொடர்ந்து விலங்கு விஞ்ஞானத் துறையின் வளர்ச்சி இப்பீடத்தில் அளப்பரியது அதற்காக முழுமையாக பங்களித்த கலாநிதி சிவலிங்கவதனி சின்னையாவின் பங்களிப்பினையும் இதில் பதிவு செய்வது பீடத்தின் பெருமையாகும்.

பீடத்தின் மூத்த உறுப்பினர் என்ற உரிமையை டிசெம்பர் 3 ஆம் திகதி செய்முறைக்காட்டுனர்களாக பதவியேற்று இன்று பேராசிரியர்களாக உயர்ந்த நளினா ஞானவேல்ராஜாவும் மிகுந்தனும் தக்க வைத்திருக்கின்றார்கள். பீடத்தின் இன்னொரு பேராசிரியையாக துஸ்யந்தி மிகுந்தனும் உயர்வு பெற்றிருக்கின்றார். கலாநிதிசிவமதி சிவச்சந்திரன் தொழினுட்ப பீடத்தின் பீடாதியதியாகவும் கலாநிதி சூரியகுமார் பீடத்தலைவராக இருக்கின்றார்கள். பீடத்தின் வளர்ச்சியில் பல மைல்கல்கள் இருக்கின்றன. தனக்கொரு விஞ்ஞான சஞ்சிகையை, உலகளாவிய மாநாட்டை இன்னும் தனக்கென ஆய்வுத்தொகுதியை அத்துடன் கற்பிப்பதற்கென பண்ணையை முழுமையாக விவசாய பீடம் கொண்டிருக்கின்றது என்பதில் அதில் அங்கத்தவர்களாக உள்ள அனைவரும் பெருமிதம் கொள்கின்றனர். பீடத்தின் சில்லுகள் இலங்கை தேசமெங்கும் பாதிக்கப்பட்ட மக்களுக்கான வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதற்காக நகர்த்தப்பட வேண்டும் என்னும் இலக்கு விரைந்து எட்டப்பட வேண்டும்.

குறைகள் பலவிருந்து நிறைவு கண்டிருக்கும் இப்பீடம் மேலுயர்வதற்கான வாய்ப்புக்கள் அதிகமே. அனைத்து வளங்களையும் அகத்திலிருத்தி தன்மை முழுமையாக வளர்ச்சிப் பாதையில் விவசாய பீடம் வளரும் காலகட்டத்தில் தொழினுட்ப பீடத்திற்கான அனைத்து வசதி வாய்ப்புக்களையும் ஆளணியையும் முக்கியமாக புலமையாளர்களையும் வழங்கி அந்த பீடம் வளர்வதற்கான அனைத்து பங்களிப்புக்களையும் செய்தல் எதிர்பார்க்கப்படுகின்றது. அதன் மூலம் அறிவியல் நகரிலுள்ள விவசாய, பொறியியல் மற்று தொழினுட்ப பீடங்கள் ஒன்றிணைந்து அதிலுள்ள ஜேர்மன் தொழினுட்ப கல்லூரியுடனும் சேர்ந்து தொழினுட்ப மையத்தை உருவாக்க வேண்டும் இது மேலும் பரிணமித்து ஒரு காலத்தில் இன்னொரு பல்கலைக்கழகமாக தொழினுட்பத்தை வளர்த்தெடுக்கும் நிலையமாக வளர வேண்டும் என்பதனை இவ்விடத்தில் பதிவு செய்து எமது நாட்டின் முதன்மைப் பிரதேசமாக மக்களின் வாழ்க்கைக்கும் மேனுயர்ந்த கல்விக்கும் சிறந்த ஆய்வினை வழிப்படுத்தவும் இப்பிரதேசம் வளரவேண்டும் அத்துடன் கிளிநொச்சிக்கான நகர பல்கலைக்கழக பிரதேசம் (City township) வளர்ச்சியடைய வாய்ப்புக்களை தேடிக்கொண்டிருக்கும் இந்நேரத்தில் அபிவிருத்தியை மையப்படுத்திய இந்த வளர்ச்சி எமது பிரதேசத்தை எமது மக்களை தொழில்ரீதியாகவும் தொழிற்றுறை சார்ந்தும் பொருளாதார ரீதியிலும் வளர்ச்சியுற வைக்கும் என முழுமையாக நம்பலாம்.

கிளிநொச்சி நோக்கி விவசாய பீடம் வந்த போது அப்போதய வடமாகாண விவசாய ஆராய்ச்சி பணிப்பாளர் கலாநிதி விவேகானந்தனின் அர்ப்பணிப்பான பங்களிப்பினால் விவசாய பீடம் விவசாய ஆராய்ச்சி நிலையத்தின் ஒரிரு அறைகளில் தனது பணியை ஆரம்பித்தது. கிளிநொச்சி வாழ் மக்களை அவர்களுக்கான அபிவிருத்தியை இது செய்யும் என்னும் அந்த பேரவா இன்னும் பாரிய இடைவெளியாகவே இருக்கின்றது. வன்னி மக்களுக்கான சேவையை நிச்சயமாக விவசாய பீடம் முழுமை செய்து மக்களின் வாழ்வாதாரத்தினை மேம்படுத்த இன்னும் தன்பணியை விரிவுபடுத்தும் என நம்பலாம். வடமாகாணத்திலிருந்து ஆரம்பித்த விவசாயத்திற்கான புரட்சி இவையனைத்தையும் உள்வாங்கிய தருணங்கள் என நாம் எண்ணிக் கொள்ள வேண்டும்.

## இனியொரு பசுமைப் புரட்சிக்கு... 306




ஒவ்வொரு வருடமும் டிசெம்பர் 4ஆம் திகதியில் உலக மண் தினம் கொண்டாடப்பட்டு வருகின்றது. இந்த தினத்திற்கு விசேட சிறப்புக்கள் உண்டு. ஒக்டோபர் 16 உலக உணவு தினம் கொண்டாடப்பட்டது. முன்னரைப்போல விமர்சனமில்லாமல் அடக்கமாக ஆனால் அத்தனை சிறப்பம்சங்களையும் உள்ளடக்கி இத்தினங்கள் கொண்டாடப்பட்டிருக்கின்றன.

இம் முறை கொரேனா காலத்திலும் உலகத்திலுள்ள மண்ணின் வளத்தை மேலும் பேணிப்பாதுகாப்பதனை அடிப்படையாக வைத்து உலக மண் தினமும் இடர்களுக்கு மத்தியிலும் கொண்டாடப்பட்டது. இத்தினங்களை கொண்டாடுவதோடு நின்றுவி டாது அதிலுள்ள மகிமைகளை உலகமக்களுக்கு எடுத்துச் செல்ல வேண்டிய கடப்பாடும் எமதாகின்றது. உலகத்து மண்ணின் உயிர்பினாலேயே அனைத்து மக்களுக்குமான உணவு உற்பத்தியாகின்றது. உணவின்றி மக்கள் உயிர்வாழ முடியாதென்னும் நிலையில் இத்துறையை விருத்தி செய்வதற்கான வாய்ப் புக்களையும் உலக உணவு மற்றும் விவசாய தாபனம் அனைத்து நாடுகளிலும் முன்னெடுத்து வருகின்றது. பட்டினியால் மக்கள் இறந்து விடக் கூடாது என்னும் கொள்கையில் அது முனைப்பாக இருக்கின்றமையினால் உலகநாடுகளில் பல திட்டங்களைத் தீட்டி அந்தந்த நாடுகளின் முழுமையான பங்களிப்புடன் பட்டினியை ஒழித்திட முனைகின்றது.

எது இருப்பினும் அனைத்தையும் கேள்விக்குறியாக்கியிருக்கின்றது கண்ணுக்குத் தெரியாத வைரசுவான கொரோனா. இன்னும் அதன் தொற்றாளர்களின் எண்ணிக்கை பலமடங்காக பெருகிக்கொண்டிருக்கின்றது. தொற்று ஏற்படுமா என பயப்பீதியிலேயே மக்கள் இன்னும் தத்தமது வீடுகளைவிட்டு வெளியில் வராமல் தம்மை காத்துக்கொள்ள துடிக்கின்றனர். ஆனால் அன்றாட வாழ்க்கையை அன்றன்று வேலைசெய்து வாழும் மக்கள் வெளியே துணிந்து வந்து வேலையொன்று கிடைக்காதா என ஏங்கியிருக்கின்றனர். இவர்களுக்கான உதவி அனைத்தும் சென்றடைய வேண்டும். வாழ்வாதாரம் முழுமையாக கிடைக்காது பட்டினியின் விழிம்பில் இருக்கும் இம் மக்களை புரேவி சூறாவளியும் சேர்த்து புரட்டிப்போட்டிருக்கின்றது. மக்களின் வாழ்வாதாரம் இன்னும் கேள்விக்குறியாகியிருக்கும் இக்காலகட்டத்தில் இம் மக்களுக்கான அவசிய உதவிகளை நல்லுள்ளம் கொண்டவர்கள் தமது சுகாதார அனுசரணைகளைக் கடைப்பிடித்து செய்ய வேண்டும்.

இது காலத் தின் கட்டாயமும் கூட. மருத்துவ உலகத்தின் கொவிட் சுகாதார நடைமுறைகளை முழுமையாக கடைப்பிடித்து தினமும் அல்லல்படும் குழந்தைகளுக்கும் முதியவர்களுக்கும் வீடுகளை இழந்து நிர்க்கதியாகியிருக்கின்ற மக்களுக்கும் அவசியம் நிவாரணப்பொருட்கள் சென்றடைவதை உறுதி செய்ய வேண்டும்.

மக்களுக்கான சரீர உதவியே மகேசனுக்கு செய்யும் உதவியிலும் மேலானது என்பதனை வேத வாக்காகக் கொண்டு அல்லல்படும் மக்களுக்கு உதவிடுவோம். வாருங்கள் இது எமக்கான பணி. உண்ண உணவின்றி ஒருவரும் எமது தேசத்தில் உயிரை விடக்கூடாது. அதற்காக நாமெல்லோரும் ஒன்றிணைவோம்.

# ஊழல்வாதிகளை காப்பாற்றிக்கொண்டு ஊழலை ஒழிப்பதாக கூறுவது வேடிக்கையானது


(கொழும்பு)

ஊழலுக்கு துணை போய்க் கொண்டும் ஊழல்வாதிகளைக் காப்பாற்றிக் கொண்டும் ஊழல் வாதிகளுக்கு எதிரான தீர்ப்புகளில் தலையிட்டுக் கொண்டும் ஊழல் எதிர்ப்பு தினத்தில் ஊழலை ஒழிக்க வேண்டும் என ஜனாதிபதிகூறுவது வேடிக்கையானதென மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர் அனுரகுமார திசாநாயக்க தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று முன்தினம் வியாழக்கிழமை 2021 ஆம் ஆண்டுக்கான வரவு -செலவுத் திட்டத்தின் இறுதி நாள் விவாதமான நிதி அமைச்சு மற்றும் நிதி இராஜாங்க அமைச்சு மீதான குழுநிலை விவாதத்தில் உரையாற்றிய போது அனுரகுமார தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில், ஊழல் ஒழிப்பு தினத்தில் ஜனாதிபதி இந்த நாட்டில் மக்கள் ஊழலைத் தாங்கிக்கொள்ள மாட்டார்கள் என்ற கருத்தை முன் வைத்தார். ஊழலுக்கு துணை போய்க்கொண்டு ஊழல் ஒழிப்பு தினத்தில் அறிக்கை விடுவதால் நாட்டின் ஊழல் ஒழிந்து விடப்போவதில்லை. மாறாக ஊழல்வாதிகளுக்கு எதிராக நடவடிக்கை எடுப்பதே சிறந்த ஆட்சி முறையாகும் எனவும் அவர் தெரிவித்தார். (நி-4)

# ஆலய வழிபாடு
## ஏன்–எதற்கு – எப்படி



## ஆனந்தம் தரும் அலங்காரம்

(தொடர்ச்சி)

திருப்பதியில் ஏழுமலையானுக்கு சாத்தப்படும் உடை 21 முழ நீளமும் 6 கிலோ எடையும் கொண்டதாகும். வாரத்துக்கு ஒருநாள் வெள்ளிக்கிழமை மட்டுமே இந்தப் பட்டு, பீதாம்பரம் உடை அலங்காரத்தைச் செய்வார்கள்.

ஏழுமலையானிடம் உள்ள அலங்கார ஆபரணங்கள் 'போல உலகில் எந்தக் கோவிலிலும் இல்லை. ஏழுமலையானை அலங்கரிக்க ரூ.1000 கோடி அளவுக்கு நகைகள் உள்ளன.

ஏழுமலையானின் சாளக்கிராம தங்க மாலையின் எடை 12 கிலோவாகும். இதை 3 அர்ச்சகர்கள் சேர்ந்து தூக்கித்தான் ஏழுமலையானுக்கு அணிவிக்க முடியும். தங்க பாதகவசம் 37 கிலோ எடை கொண்டது. ஏழுமலையானுக்கு பல கிரீடங்கள் உள்ளன. ஒவ்வொரு கிரீடமும் பல நூறு கோடி ரூபாய் மதிப்புக் கொண்டது. அதனால் தான் திருப்பதியில் மூலவரையும் உற்சவரையும் எப்போதும் பக்தர்கள் சர்வ அலங்காரத்தில் கண் குளிரக் காண முடிகிறது.

ஸ்ரீரங்கத்தில் வைகாசி மாதம் நடக்கும் பிரமோற்சவ நாட்களில் ரங்கநாதர் ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு அலங்காரத்தில் வருவார். 8 ஆம் நாளன்று அவர் வெண்ணெய்த் தாழி கிருஷ்ணராக வருவது மனதைக் கொள்ளை கொள்ள செய்யும்.

தீபாவளி தினத்தன்று ரங்கநாதருக்கு ஆயிரம் ஒரு ரூபாய் நாணயங்களை மூட்டையாகக் கட்டி "ஜாலி அலங்காரம்" என்று காலடியில் சமர்ப்பிப்பார்கள். இந்த அலங்காரத்தில் ரங்கநாதரை வழிபட்டால் ஆடைக்கும் பணத்துக்கும் தட்டுப்பாடு வராது என்பது ஐதீகம். வைணவத்தலங்களில் பெருமாளுக்குச் செய்யப்படும் அலங்காரங்கள் மட்டுமின்றி ஆஞ்சநேயருக்கான அலங்காரங்களும் உரிய பலன்களைத் தரும். குறிப்பாக ஆஞ்சநேயருக்கு செய்யப்படும் வடை மாலை அலங்காரம் ராகு தோஷத்தை நீக்கும் சக்தி கொண்டது.

அம்பாளுக்கு செய்யப்படும் ஆடை அலங்காரத்திலும் சில மரபுகள் கடைப்பிடிக்கப்படுகின்றன. அம்பாளுக்கு காலையில் சிவந்த நிறப்பட்டும் மாலையில் நீலம், பச்சை நிறமுள்ள புடைவைகளும் அர்த்தஜாமத்தில் சிவப்பு அல்லது பச்சை கலந்து கரை உள்ள பட்டுப்புடைவைகளும் சாத்த வேண்டும்.

"அம்பாளுக்கு செய்கிற அலங்காரம் தான் நமக்கு அழகு, நமக்கு நாமே செய்து கொள்கிற அலங்காரம் அகங்காரத்துக்குத் தான் வழிகாட்டும்" என்று காஞ்சி பெரியவர் ஒரு தடவை கூறினார்.

பல வகை பூக்களால் யார் ஒருவர் அம்மனை அலங்கரித்து பூஜிக்கிறார்களோ அவர்களுக்குக் கைலாய வாச அதிர்ஷ்டம் கிடைக்கும். வில்வ இலை அலங்காரம் செய்பவர்களுக்கு இம்மையில் மட்டுமின்றி மறுமையிலும் மகிழ்ச்சி உண்டாகும். ரத்தின ஆபரணங்களை சமர்ப்பித்து ஆராதிப்பவன் குபேரன் ஆவான். தேவியின் திருமேனிக்கு சந்தனக் காப்பு அலங்காரம் செய்து வழிபடுவனுக்கு இந்திரனுக்கு சமமான புகழ் கிடைக்கும்.

அம்பிகைக்கு எலுமிச்சம் பழ மாலையால் அலங்கரித்து வழிபட்டால் நினைத்தது நிறைவேறும். அம்பிகையைத் திருமண கோலத்தில் வழிபட்டால் உடனே திருமணம் கைகூடும் என்பார்கள். அது போல ஆடிப்பூரத்தன்று எல்லா சக்தித் தலங்களிலும் அம்மனுக்கு வளையல் அலங்காரம் செய்து வழிபடுவார்கள். அந்த வளையலை வாங்கி அணியும் பெண்களுக்கு சுபீட்சம் உண்டாகும் என்பது ஐதீகம்.

தாயாருக்குச் செய்யப்படும் புஷ்ப அங்கி அலங்காரம், சென்னையில் கற்பகாம்பாளுக்குச் செய்யப்படும் ஜடை அலங்காரம் போன்றவை தனித்துவம் கொண்டவை. சோட்டாணிக்கரை பகவதி அம்மனுக்கு காலையில் வெள்ளை உடை, மதியம் சிவப்பு ஆடை, மாலையில் நீல உடை அணிவித்து அலங்காரம் செய்வது "முத்தேவி தத்துவம்" என்பார்கள். எனவே அம்மனுக்கு செய்யப்படும் ஒவ்வொரு அலங்காரத்துக்கும் ஒரு தத்துவம் இருப்பதை உணர்ந்து புரிந்து வழிபடுதல் வேண்டும்.

அபிஷேக, அலங்காரம் முடிந்த பிறகு இறைவனுக்கு ஆராதனையைத் தொடங்குவார்கள். அதற்கு முன்பு சாமிக்கு உணவு கொடுக்க வேண்டும் அல்லலா? என்னென்ன நைவேத்தியம் படைப்பது என்பதை அடுத்து பார்க்கலாம்.

(முற்றும்)

# செய்தித்துளிகள்

## 197 பேர் நாடு திரும்பினர்

(கொழும்பு)

கொரோனா வைரஸ் தொற்று அச்சுறுத்தல் காரணமாக வெளிநாடுகளில் சிக்கி தவித்த 197 இலங்கையர்கள் நேற்று வெள்ளிக்கிழமை காலை நாட்டை வந்தடைந்தனர்.

இதற்கமைய ஐக்கிய அரபு இராச்சியத்தின் டுபாயில் இருந்து 107 பேரும் அவுஸ்திரேலியாவின் மெல்பேர்ன் நகரில் இருந்து 78 பேரும் ஜப்பானின் நரீட்டா நகரில் இருந்து 12 பேரும் இவ்வாறு கட்டுநாயக்க பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தை வந்தடைந்துள்ளார்கள்.

இவ்வாறு வருகை தந்த அனைவருக்கும் பி.சி.ஆர். பரிசோதனை மேற்கொள்ளப்பட்டு, தனிமைப்படுத்தல் நிலையங்களுக்கு அழைத்துச் செல்லப்பட்டுள்ளதாக விமான நிலையத் தகவல்கள் தெரிவிக்கின்றன. (நி-4)

## 50 இற்கும் மேற்பட்ட பட்டதாரி பயிலுநர்கள் கடமையில் இணைவு

(ஹற்றன்)

தோட்ட வீடமைப்பு மற்றும் சமுதாய உட்கட்டமைப்பு வசதிகள் அமைச்சுக்கு நேற்று முன்தினம் 50 இற்கும் மேற்பட்ட பட்டதாரிபயிலுநர்கள்பணிக்காக இணைத்துக்கொள்ளப்பட்டனர். (நி-4)

## முடக்கப்படும் இடங்கள் அதிகரிப்பு

(கொழும்பு)

கொரோனா அச்சுறுத்தல் காரணமாக நாட்டில் தனிமைப் படுத்தப்பட்ட பகுதிகள் அதிகரிக்கின்றன.

கொரோனாத் தடுப்புக்கான தேசிய செயற்பாட்டு மையம் இந்த தகவலை வெளியிட்டுள்ளது.

கொழும்பு மாவட்டத்தில் 18 பிரதேசங்களும் கம்பஹா மாவட்டத்தில் 11 பிரதேசங்களும் களுத்துறை மாவட்டத்தில் 7 பிரதேசங்களுமாக மேல் மாகாணத்தில் 35 பிரதேசங்கள் தற்போது தனிமைப்படுத்தப்பட்டுள்ளன.

அத்துடன், கண்டி மாவட்டத்தில் 4 பிரதேசங்கள் தனிமைப்படுத்தப்பட்டுள்ளதுடன், புத்தளம் மாவட்டத்தில் 5 பிரதேசங்களும் அம்பாறை மாவட்டத்தில் ஒரு பிரதேசமும் தனிமைப்படுத்தப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (நி-4)

# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி ரூபா | மருதனார்மடம் ரூபா | சாவகச்சேரி ரூபா | கிளிநொச்சி ரூபா |
|---|---|---|---|---|
| கத்தரிக்காய் | 350 | 250 | 300 | 280 |
| உருளைக்கிழங்கு | 180 | 160 | 170 | 180 |
| பச்சைமிளகாய் | 250 | 400 | 300 | 350 |
| தக்காளி | 100 | 100 | 120 | 120 |
| மரவள்ளிக்கிழங்கு | 80 | 60 | 80 | 50 |
| கோவா | 80 | 60 | 80 | 80 |
| கரட் | 140 | 200 | 240 | 200 |
| பூசணி | 100 | 100 | 80 | 120 |
| புடோல் | 150 | 180 | 120 | 160 |
| வாழைக்காய் | 60 | 50 | 60 | 120 |
| சின்ன வெங்காயம் | 320 | 320 | 240-400 | 400 |
| பெரிய வெங்காயம் | 180 | 160 | 200 | 200 |
| பாகற்கஆய் | 400 | 400 | 450 | 400 |
| வெண்டிக்காய் | 160 | 180 | 80 | 150 |
| கருணைக் கிழங்கு | 100 | 100 | 120 | 150 |
| பயற்றங்காய் | 450 | 400 | 400 | 280 |
| லீக்ஸ் | 100 | 90 | 100 | 120 |
| பீற்றூட் | 120 | 120 | 120 | 120 |
| கறிமிளகாய் | 250 | 400 | 320 | 280 |
| முருங்கைக்காய் | 400 | 600 | 260 | 280 |
| போஞ்சி | 200 | 250 | 220 | 240 |
| கத்தரி தம்புள்ள | 300 | 200 | 240 | 250 |
| கீரை - 1 பிடி | 60 | 80 | -- | 80 |
| தேசிக்காய் | 200 | 200 | 180 | 250 |
| தேங்காய் (ஒன்று) | 80 | 90 | 80 | 70-90 |
| இராசவள்ளி | 250 | 300 | -- | 300 |
| வெங்காயப்பூ | 350 | 350 | -- | -- |
| முள்ளங்கி | 60 | 140 | -- | 120 |
| பொன்னாங்காணி | 40 | 45 | 50 | 40 |
| வல்லாரை | 20 | 60 | 20 | 20 |
| ஈரப்பலா | 80 | 100 | -- | 120 |



# சிறுவர் அரங்கம்

## எதிர்கால வாழ்க்கை!

ஒருநாள் முல்லா தெரு வழியா நடந்து போய்க் கொண்டிருந்தார். ஒரு குடிசை வாசலை அவர் கடந்து சென்ற சமயம் குடிசைக்குள் ஏதோ சத்தம் கேட்கவே உள்ளே சென்றார்.

அந்தக் குடிசையில் ஒரு ஏழை விதவைப் பெண் வசித்து வந்தாள் துணிகளை தைத்துக் கொடுத்து அவள் கஷ்ட ஜீவனம் நடத்திக் கொண்டிருந்தாள் அவளுக்கு பத்து வயதில் ஒரு மகன் இருந்தான்.

அந்தக் குடும்பத்தைப் பற்றி முல்லாவுக்கு நன்றாகத் தெரியும் அவர்கள் மீது அவருக்கு அனுதாபமும் உண்டு. வீட்டுக்குள் தாயும் மகனும் எதோ சச்சரவில் ஈடுபட்டிருந்தனர்.

“இங்கே என்ன நடக்கிறது?” என்று முல்லா வினவினார். “முல்லா அவர்களே இவனைப் பாருங்கள் ஒழுங்காக பள்ளிக்கூடம் போகமாட்டேன் என்று அடம்பிடிக்கிறான், அறிவுரை கூறிப் பார்த்தேன் அடித்து மிரட்டிப் பார்த்தேன் ஒன்றுக்கும் மசியமாட்டேன் என்கிறான் ” என்றாள் தாய் வேதனையோடு.

“குழந்தாய் நீ பள்ளிக்கூடம் போக வேண்டியது அவசியமில்லையா? அது உன் எதிர்காலத்துக்கு நல்லதில்லையா?” என்று முல்லா சிறுவனுக்கு புத்திமதி கூறினார். பையன் கேட்பதாக இல்லை.

“நான் பள்ளிக்கூடம் போகப் போவதே இல்லை” என்று அடம்பிடித்தான். முல்லா சுற்றும்முற்றும் பார்த்தார். தைப்பதற்காக அந்தப் பையனின் தாய் வைத்திருந்த விலை உயர்ந்த துணி ஒன்று அவர் கண்களில் பட்டது.

அதை எடுத்து முல்லா துண்டு துண்டாகக் கிழித்துப் போட்டு விட்டார். அதைக் கண்டு தாயும் மகனும் அதிர்ச்சியும் திகைப்பும் அடைந்தனர்.



“அம்மா முல்லா விலை உயர்ந்த துணியைக் கிழித்துப் பாழாக்கி விட்டாரே?” என்று திகைப்போடு கேட்டான் பையன்.

“பள்ளிக்கூடம் போகமாட்டேன் என்று உன் எதிர் கால வாழ்க்கையையே பாழாக்கிக் கொள்கிறாயே. அதைவிட இந்த விலையுயர்ந்த துணி பாழானது பெரிய விடயமா” என்றார் முல்லா.


இந்தச் சொற்கள் அவன் மனத்தில் பெரிய மாறுதலை உண்டாக்கிற்று. உடனே புத்தகங்களை எடுத்துக் கொண்டு பள்ளிக்குப் புறப்பட்டான்.

அவன் சென்றபிறகு முல்லா தாம் கிழித்த துணியின் மதிப்புக்கேற்ற விலையைக் கொடுத்து விட்டுப் புறப்பட்டார்.

# மகா அலெக்சாண்டரின் வரலாறு

## அரியணையில் அலெக்சாண்டர்

52



ஆத்திரம் பொங்கியது அலெக்சாண்டருக்கு. என்ன திமிர் உங்களுக்கு? வீரர்களே, இந்தத் தீபு நகரமே தரைமட்டமாகட்டும்.

ஓங்கி உயர்ந்த கட்டடங்களை எல்லாம் சின்னத்துகள்களாக மாற்றுங்கள். தேவைப்பட்டால் எரித்து விடுங்கள்.

மாசிடோனியப் படை தங்கியிருக்கும் கோட்டை மட்டும் மிச்சமிருக்கட்டும். நமக்கு விசுவாசமாக இருப்பவர்களை மாத்திரமே விட்டுவிடுங்கள்.

எல்லோரையும் சிறைப்பிடியுங்கள். அடிமைகள் என்று சொல்லி யாரிடமாவது விற்று விடுங்கள். திமிறினால் பிணமாக்கிவிடுங்கள். தப்பில்லை. ஆனால் ஒரேயொரு வேண்டுகோள்.

பேச்சை நிறுத்தினார் அலெக்சாண்டர். உத்தரவிடும் உரிமை கொண்ட மன்னர் வேண்டுகோள் விடுக்கிறாரே என்று ஆச்சரியப்பட்டார்கள் வீரர்கள்.

கவிஞர்கள், படைப்பாளிகள், இலக்கிய அறிஞர்களை விட்டு விடுங்கள். குறிப்பாக பிண்டார் என்கிற கவிஞர் வாழ்ந்த இல்லத்தை ஒன்றும் செய்து விட வேண்டாம். அவர் மாபெரும் படைப்பாளி. அந்த இசைப்புலவரின் பாடல்கள் அத்தனையும் இனிமையின் பிரவாகம்.

அவருக்கு மரியாதை கொடுக்க வேண்டியது நம்முடைய கடமை. ஆகவே அதைத் தவிர்த்து மற்றப் பகுதிகள் அனைத்தையும் நிர்மூலமாக்கிவிடுங்கள்.

அலெக்சாண்டரின் உத்தரவு அப்படியே நிறைவேற்றப்பட்டது. படைப்பாளியாகப் பிறந்திருந்ததால் டெமாஸ்தனிஸின் உயிரும் தப்பியது.

வெற்றிக் களிப்புடன் தீபு நாட்டில் இருந்து மாசிடோனியா புறப்பட்டன அலெக்சாண்டரின் படைகள்.

(தொடரும்)

> பாலங்களைக் கட்டுவதற்குப் பதில் சுவர்களை அமைத்து விடுவதால்தான் பல மனிதர்கள் தனித்து விடப்படுகிறார்கள்.
>
> – யாரோ

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## ஆமையைப் பிடிப்பார் மல்லாத்துவார் அதை நாம் சொன்னால் பாவம்

அறிவு, அனுபவம் இவ்விரண்டும் ஒன்று சேரும்போதுதான் செயற்றிறன் ஏற்படுகிறது.

அறிவில்லாத அனுபவமும் அனுபவம் இல்லாத அறிவும் காத்திரமான செயலாக்கத்தை தந்துவிட மாட்டாது.

இதை நாம் கூறும்போது, அறிவு கற்றல் ஊடாகவும் அனுபவம் காலத்தின் அசைவினூடாகவும் கிடைக்கப் பெறுவது.

அப்படியானால், இளைஞர்களின் அறிவுக்கு அனுபவம் இருக்க மாட்டாது.

அதேபோன்று அறிவுப்புலம் இல்லாத விடத்தும் துறைசார் அனுபவம் கொண்டவர்களும் உளர்.

அவ்வாறாயின் இரண்டும் ஒருவரிடம் ஒருங்குபடுவது உடனடிச் சாத்தியமா? என்ற கேள்வி ஏற்படும்.

இங்குதான் அறிவுடையவரும் அனுபவம் உடையவரும் ஒன்றுசேர வேண்டும்.

அதாவது ஒரு பிரதேசத்தில் வடிகால் அமைப்பதாக இருந்தால், வடிகால் அமைக்கும் தொழில்நுட்பம் உடையவரும் அப்பகுதியில் நெடுங்காலம் வாழ்கின்ற – அந்தப் பகுதியின் தரை அமைப்பை நன்குணர்ந்த அனுபவம்மிக்கவரும் ஒன்றுசேர்ந்து திட்டமிடும்போது எந்த நோக்கத்துக்காக வடிகால் அமைக்கப்படுகிறதோ அந்த நோக்கம் நிறைவேறும்.

இருந்தும் நம்மிடம் இருக்கக்கூடிய செருக்கு அறிவை அனுபவத்துடனும் அனுபவத்தை அறிவுடனும் சேர்வதற்குத் தடை செய்கிறது.

இதனால் எந்த வேலைத்திட்டத்தைச் செய்தாலும் அஃது இன்னொரு பிரச்சினையை ஏற்படுத்தி விடுகிறது.

ஆக, அறிவு அனுபவம் இரண்டும் கலந்தாக வேண்டும்.

இதை விளக்குவதற்காகப் புனையப்பட்ட கதை இது.

கடலில் சென்று ஆமை பிடிப்பவர்கள் ஆமையை கரையில் கொண்டு வந்து வைத்துவிட்டு மீண்டும் கடலுக்குச் செல்வர்:

அவ்வாறு சென்றவர்கள் திரும்பி வரும்போது தாம் கரையில் வைத்த ஆமைகளைக் காணாது வேதனைப்படுவர்.

இருந்தும் ஆமையைப் பிடிப்பதும் அதனைக் கரையில் வைப்பதுமாக இருந்ததைப் பார்த்த கடவுள் அவர்கள் மீது இரக்கம் கொண்டு; ஆமையைப் பிடிப்பார் மல்லாத்துவார். அதை நாம் சொன்னால் பாவம் என அசரீரியாகக் கூறினாராம்.

அதன்பின்தான் ஆமை பிடிக்கின்றவர்கள் தாம் பிடித்த ஆமையை மல்லாத்திவிடத் தொடங்கினர்.

ஆக, ஆமையைப் பிடித்தால் அதனை மல்லாத்திவிட வேண்டும் என்ற விடயம் தெரிய வேண்டும்.

இல்லையென்றால் தன் புலன்களை ஒடுக்கக்கூடிய ஆமையை அடக்குவது முடியாத காரியம்.

இந்தக் கதையின் உட்பொருள் மெய்ப்பொருள் உணர்ந்து செயற்பட வேண்டும் என்பதாகும்.

இங்குதான் மெய்ப்பொருளை விரைவாக உணர்வதற்கு அறிவும் அனுபவமும் ஒன்றாக வேண்டும்.

இதை நாம் கூறும்போது நம் தமிழ் அரசியலில், அரசியல் அறிவும் அரசியல் அனுபவமும் ஒன்றுசேராத காரணத்தால் எதையும் நம்மால் இராஜதந்திரத்துடன் செயற்படுத்த முடியவில்லை.

சுருங்கக்கூறின் ஆமையைப் பிடித்து கரையில் வைக்கின்ற நிலையிலேயே நம் தமிழ் அரசியலும் உளது.

# நாம் ஒருபோதும் மக்களுக்கு மோசடி செய்யமாட்டோம்-பிரதமர்

(கொழும்பு)

தேர்தலை எதிர்பார்த்து எந்தவொரு விடயமும் இந்த வரவு-செலவுத் திட்டத்தில் உள்ளடக்கப்படவில்லை. நாம் அந்த மோசடி செயலை மக்களுக்கு செய்ய மாட்டோம் என பிரதமர் மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் வியாழக்கிழமை நடைபெற்ற பாராளுமன்றத்தில் வரவு- செலவுத் திட்டத்தின் மூன்றாவது வாசிப்பு மீதான விவாதத்தின்போது, பிரதமர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

குறித்த விவாதத்தில் அவர் மேலும் கூறியுள்ளதாவது, "இந்த வரவு-செலவுத் திட்டத்தை நாம் முன்வைக்கும் போது 70 பில்லியன் ரூபாயை கொரோனாத் தொற்றுக்கென செலவிட்டிருந் தோம்.

வரவு-செலவுத் திட்டத்தின் மூன்றாவது வாசிப்பு இடம்பெறும் இன்றைய நாளில் நாம் 82 பில்லியன் ரூபாயை கொவிட் ஒழிப்பிற்காக செலவிட்டுள் ளோம்.

டிசெம்பராகும் போது அது 90 பில்லியனை விட அதிகமாகும். அதனால் இதுபோன்ற பாரிய சவால்களை ஏற்றுக் கொண்டு முன்வைக்கப்படும் வரவு- செலவுத்திட்டமாக இதனை குறிப்பிட வேண்டும்.

நாம் உலகத்துடன் எந்தளவிற்கு பிணைக்கப்பட்டுள்ளோம் என்பதை உணர சரியான தருணம் தான் இது.

உலகில் இடம்பெறும் விடயங்கள் அரசியல், பொருளாதாரம், சுகாதார அடிப்படையில் இடம் பெறும் விடயங்கள் எம்மை எந்தளவு பாதிக்கும் என்பதை புரிந்து கொள்ளக்கூடிய சந்தர்ப்பம் இதுவாகும்.

நாம் நமது பொருளாதாரத்தை தேசிய மட்டத்தில் கட்டியெழுப்பியிருந்தால் இதுபோன்ற நெருக்கடிகளுக்கு முகங்கொடுக்க கூடியதாயிருந்திருக் கும்.

அதுதான் கொவிட்-19 எமக்கு கற்பித்த பாடம். நாம் ஏற் கனவே இந்நிலையை புரிந்து கொண்டிருந்தோம்.

அதனாலேயே சுபீட்சத்தின் நோக்கு தேசிய பொருளாதாரம் குறித்தும், தேசிய விவசாய வளர்ச்சி தொடர்பிலும் எண்ணினோம். இந்த வரவு- செலவுத் திட்டம் சுபீட்சத்தின் நோக்கு கொள்கைத் திட்டத்தை அடிப்படையாகக் கொண்டதாகும்.

மற்றைய வரவு-செலவுத் திட்டங்களில் காணப்பட்ட நோக்கமல்ல இந்த வரவு- செலவுத் திட்டத்தில் காணப்படுவது. மற்றைய வரவு-செலவுத் திட்டங்களில் வரவு-செலவுத் திட்ட பற்றாக்குறையை ஈடுசெய்வதே முதன்மையாகும். எனினும் இந்த வரவு-செலவுத் திட்டம் உள்ளூர் விவசாயிகள், உள்ளூர் தொழிலதிபர்கள், உள்ளூர் உற்பத்தியாளர்கள் ஆகியோரை மேம்படுத்தி உலகை எதிர்கொள்ளக்கூடிய மற்றும் இதுபோன்ற பாதிப்புகளுக்கு முகங்கொடுக்கக் கூடிய நாட்டை கட்டியெழுப்புவதற் காகவே முழுமையாக ஒதுக்கப்பட்டுள்ளது என்றார். (ம-3)

## மறவன்புலோவில் பயிர் அழிவுகளை பதிவு செய்யும் நடவடிக்கை

(நல்லூர்)

புரேவி புயல் தாக்கம் காரணமாக ஏற்பட்ட வெள்ளப் பெருக்கினால் அழிவடைந்த வயல் நிலங்களுக்கான காப்புறுதியினை பெற்றுக் கொள்வதற்கான பதிவு நடவடிக்கை மறவன்புலோவில் மேற்கொள்ளப்படுகின்றது.

மறவன் புலோவில் அமைந் துள்ள கமக்கார அமைப்பின் அலுவலகத்தில் நேற்று இடம்பெற்ற பதிவு நடவடிக்கையில் ஏராளமான விவசாயிகள் தமது பயிர் அழிவடைந்தமைக்கான பதிவு நடவடிக்கையில் ஈடுபட்டிருந்தனர்.

புரேவி புயல் தாக்கத்தினால் மறவன்புலோ கமக்காரப் அமைப்பிற்கு உட்பட்ட வயல் நிலங்களில் 50 வீத மானவை அழிவடைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

மழை வெள்ளம் அதிகளவில் பெருக்கெடுக்கும்போது அது வழிந்தோடக் கூடிய வகையில் கீரை வாய்கால் மற்றும் பெரிய தூவில் குளத்தின் தடுப் பணைகள் அமையப்பெறாமையே வெள்ளத்தினால் பயிர் நிலங்கள் அழிவடைவதற்கு காரணமாக அமைக்கின்றது என விவசாயிகள் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி)

## மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை 13 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணியிலிருந்து 5 மணிவரை

**யாழ்.பிரதேசத்தில்** மந்திகை, உபயகதிர்காமம், முள்ளி, வல்லிபுரம், வல்லிபுரம் நீர்ப்பாசன மற்றும் வடிகால் அமைப்பு சபை, கற்கோவளம், புனிதநகர், நெல்லண்டை, தும்பளை, 1ம் குறுக்குத் தெரு, 2ம்குறுக்குத்தெரு, 3ம் குறுக்குத்தெரு, ஜெயந்தா கைத்தொழிற்சாலை பிறைவேற் லிமிற்ரெட் கற்கோவளம் ஆகிய பிரதேசங்களிலும், மின் தடைப்படும்.

# சுவாமி விவேகானந்தரின் சிந்தனைத்துளிகள்



## மனதில் உறுதியுடன் போராடு

❖சொல்லால் விளக்க முடியாத மேம்பட்ட அன்பின் சாரமாக இறைவன் இருக்கி றான். அவனை நாம் உணர முடியுமே தவிர, அவனது அன்பின் தன்மையை யாராலும் விளக்கமுடியாது.

❖ இறைவன் ஒருவனே கொடுப்பவன். அவன் தரும் காசோலையைப் பெற்றுக் கொள்ளுங்கள். அதனை பணமாக்கிக் கொள்ளலாம்.

❖ நன்மை, உண்மைக்கு மிக அருகில் இருக்கிறது. ஆனாலும், அது இன்னும் உண்மையின் இடத்தை அடையவில்லை.

❖ மனிதர்கள் தீமையைக் கண்டு மனம் கலங்கக்கூடாது. உள்ள உறுதியுடன் எதிர்த்துப் போராடவேண்டும். அதேபோல, நன்மை கிடைத்துவிட்டதே என தலைகால் புரியாமல் ஆடவும்கூடாது. அமைதியாக இருக்கக் கற்றுக் கொள்ள வேண்டும்.

❖ உயிர்களில் உயர்ந்தவன் மனிதன். உலகங்களில் உயர்ந்தது மண்ணுலகம். மனிதனைவிட உயர்ந்த ஒரு கடவுளை நம்மால் கற்பனை செய்ய முடியாது. எனவே நமது கடவுள் மனிதனே.

❖ இறைவனின் திருநாமத்தை திரும்பத் திரும்ப சொல்வதே ஜபம். ஜபம் செய்வதன் மூலம் இறைவனின் எல்லையற்ற அருளை பக்தனால் அடையமுடியும்.

# பால்நிலை வன்முறைகளுக்கு எதிராக திருத்தி எழுதப்பட வேண்டிய தீர்ப்புகள்


**"சிறகுகள் இருந்தும் பறப்பதே இல்லை சிலர் வேட்டைக்காரனின் தோட்டாக்களை விட கூண்டுகளே மேல் என்று"**

என்னும் கவிதை வரிகளில் பொதிந்து இருக்கும் ஆழமான அர்த்தம் பால்நிலை சார்ந்த வன்முறைகளை எதிர்கொண்டவர்களுக்கு தெளிவாக விளங்கும். உண்மையில் நமது தமிழ் சமூகத்தில் இது தொடர்பாக அதிகம் பேசி ஆக வேண்டிய சூழலில் நாம் இருக்கிறோம்.

ஒருவர் தனது பாலின அடையாளம் காரணமாக துன்புறுத்தல்களுக்கு உள்ளாகும்போது அதுவே பால்நிலை வன்முறை (Gender based Violence) என அடையாளப்படுத்தப்படும்.

வேலைத்தளங்களில், கல்வி நிறுவனங்களில், பொது இடங்கள், இணைய வெளிகளில், வீட்டில் என வன்முறைகள் ஒருவருக்கு எங்கும் நிகழக்கூடும். பொதுவாக வன்முறைகளால் பெண்கள் மட்டுமே பாதிக்கப்படுகின்றனர் என்கின்ற ஒரு மன நிலை பலரிடம் இருக்கிறது. ஆனால் தற்போது ஆண்கள் மற்றும் திருநங்கைகள், திருநம்பிகள் என்னும் மூன்றாம் பாலினத்தவரும் சமூகம் சார்ந்த வன்முறைகளால் அதிகம் பாதிக்கப்படுவதாக புள்ளி விபரங்கள் சொல்லுகின்றன. அத்துடன் மாற்றுத்திறனாளிகளும் அதிகம் வன்முறைக்கு உள்ளாகுகின்றனர். அதிலும் ஆண்கள் பெரும்பாலும் தமக்கு நிகழும் பால்நிலை சார்ந்த வன்முறை பற்றி வெளியில் சொல்லிக் கொள்ளும் போக்கும் மிகக் குறைவாகவே நம் சமூகத்தில் இருக்கிறது. நமது கலாசாரம், பண்பாடு விழுமியங்கள் மற்றும் அதிகார மையத்தின் குறியீடாக ஆண்களே கருதப்படுவதால் அவர்களுக்கு வன்முறைகள் நிகழ வாய்ப்பில்லை என்கின்ற பொய் நம்பிக்கை (myth) இதில் பெரும் செல்வாக்கு செலுத்துகிறது.

பால்நிலை சார்ந்த வன்முறைகள் உடல் மற்றும் உணர்வு சார்ந்ததாகவோ அல்லது சமூகம் மற்றும் பொருளாதாரம் சார்ந்ததாகவோ இருக்கலாம். குறிப்பாகத் தோட்டத் தொழில் செய்யும், ஆடைத்தொழில் சாலைகளில் பணிபுரியும் பெண்கள்



மற்றும் வெளிநாடுகளில் பணிப் பெண்களாக பணிபுரியும் பெண்கள் பொருளாதார ரீதியில் அதிகம் வன்முறைகளை எதிர்கொள்கின்றனர். அதுபோல ஆண் பிள்ளைகள் சிறுவயதில் அதிகம் வன்முறைக்கு உள்ளாகுகின்றனர்.

இலங்கையின் சட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் பால்நிலை சார்ந்த வன்முறை குற்றமாகவே கருதப்படுகிறது. குறிப்பாக அனைத்துல பெண்களுக்கு எதிரான பாரபட்சங்களை களையும் சீடோ சமவாயம், ஐக்கிய நாடுகளின் 1325 உடன்படிக்கை போன்றன பெண்களுக்கு வன்முறைகள் நிகழும் தருணங்களையும் அவை தொடர்பான இல்லாதொழிப்பதுக்கான சந்தர்ப்பங்கள் பற்றி எடுத்துரைக்கும் குறிப்பிடத்தக்க சில சர்வதேச சமவாயங்கள் ஆகும்.

ஐ.நா.பெண்கள் அமைப்பின் "மாற் றுத்திறனாளிப் பெண்கள் மற்றும் பொருளாதார வாய்ப்புகள் பற்றிய அணுகுமுறை" தொடர்பான அறிக்கையானது மாற்றுத்திறனாளிப் பெண்கள் எதிர்கொள்ளக் கூடிய பொருளாதாரம் சார்ந்த வன்முறை பற்றி தெளிவாக எடுத்துரைக்கிறது.

இலங்கையில் தற்போதுள்ள அரசியல் மற்றும் சமூக சூழல், பால்நிலை சார்ந்த மாதிரி வார்ப்புகள் பற்றி மீள் வாசிப்புக்கு உட்படுத்துகின்றது. அது மட்டுமன்றி மகளிர் அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், சிறுவர் மற் றும் மகளிர் அமைச்சு, இலவச சட்ட ஆலோசனை மையங்கள், வைத்தியசாலை, பொலிஸ் பெண்கள் மேசை உளவள மற்றும் பால் நிலை சார்ந்து இயங்கும் அரச மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்கள் போன்றன இத்தகைய வன்முறைகளை எதிர்கொள்வதுக்கான ஆலோசனைகளையும் வழிகாட்டல்களையும் வழங்குகின்றன.

வன்முறைகளிருந்து விடுபடுவது மற்றும் வெளிவருவது என்பது பற்றிய அறிவூட்டல்கள் காலத்துக்குக் காலம் சொல்லப்பட்டுக் கொண்டு வந்தாலும் அவற்றை எதிர்கொள்ளும் தருணங்களில் எல்லோருமே உடனே எதிர்வினையாற்ற துணிவது இல்லை. உண்மையில் குரல் அற்றவர்களுக்கான குரல் (Voice for the Voiceless) என்பது வன்முறைகளுக்கு எதிராக பேசுபவர்களுக்கு கொஞ்சம் அதிகம் தேவைப்படுகிறது. பாதுகாப்பான சூழலை நம் சந்ததிக்கு விட்டுச் செல்ல வேண்டுமானால் தவறுகள் நடைபெறும்போது அவற்றை வெளிக் கொண்டு வரவேண்டி உள்ளது.

பால்நிலை வன்முறை சார்பாக நாம் நமது சமூக கட்டுமானங்கள் மற்றும் நம்பிக்கைகள் பற்றி மீள் வாசிப்பு உட்படுத்த வேண்டும். இது வன் முறைகளைக் குறைப்பதுக்கு உதவுவதுடன் சில மூட நம்பிக்கை அடிப்படையில் நடைபெறும் கலாசார வன்முறைகளை கேள்விக்கு உட்படுத்த உதவும்.

இருப்பினும் வன்முறைகள் வருமுன் அவற்றை தடுப்பதும் வன்முறைகளால் பாதிக்கப்பட்டவர்களை கையாளும்போது தீங்கிழைப்பதைக் குறைத்தல் (Minimizing harm) அடிப்படையில் பயணித்தலும் சாலச் சிறந்தது ஆகும்.

**கிருத்திகா தருமராஜா**
**பால்நிலை மற்றும் தொடர்பாடல் ஆலோசகர்**

# அரையிறுதிக்கு முன்னேறியது கிளாடியேட்டர்ஸ் தொடரிலிருந்து வெளியேறியது டஸ்கர்ஸ்



லங்கா பிரீமியர் லீக் இருபது-20 தொடரின் 19 ஆவது லீக் போட்டியில், காலி கிளாடியேட்டர்ஸ் அணி 9 விக்கெட்டுகளால் அபார வெற்றி பெற்றுள்ளது.

நேற்று முன்தினம் அம்பாந்தோட்டை மைதானத்தில் நடைபெற்ற இப்போட்டியில், காலி கிளாடியேட்டர்ஸ் அணியும் கண்டி டஸ்கர்ஸ் அணியும் பலப்பரீட்சை நடத்தின.

இப்போட்டியில் நாணய சுழற்சியில் வெற்றி பெற்ற காலி கிளாடியேட்டர்ஸ் அணி முதலில் களத்தடுப்பை தீர்மானித்தது.

இதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய கண்டி டஸ்கர்ஸ் அணி, 19.1 ஓவர்கள் நிறைவில் அனைத்து விக்கெட்டுகளையும் இழந்து 126 ஓட்டங்களுக்கு சுருண்டது.

இதில் அணியின் அதிகப்பட்ச ஓட்டங்களாக, குசல் மெண்டிஸ் 68 ஓட்டங்களையும் பிரெண்டன் டெய்லர் 20 ஓட்டங்களையும் பெற்றுக்கொண்டனர்.

காலி அணியின் பந்து வீச்சில், மொஹமட் ஆமிர், நுவான் துசார, தனஞ்சய லக்ஷான் மற்றும் ஷான் ஆராச்சிகே ஆகியோர் தலா 2 விக்கெட்டுகளையும் சந்தகான் 1 விக்கெட்டினையும் வீழ்த்தினர்.

இதனைத் தொடர்ந்து 127 என்ற வெற்றி இலக்கை நோக்கி பதிலுக்கு களமிறங்கிய காலி கிளாடியேட்டர்ஸ் அணி, 17 ஓவர்கள் நிறைவில் வெறும் 1 விக்கெட் இழப்புக்கு வெற்றி இலக்கை கடந்தது.

இதனால் காலி அணி 9 விக்கெட்டுகளால் அபார வெற்றி பெற்றது.

இதன்போது அணியின் அதிகபட்ச ஓட்டங்களாக தனுஷ்க குணதிலக்க ஆட்டமிழக்காது 94 ஓட்டங்களையும் ஹஸரதுல்லா ஷசாய் 20 ஓட்டங்களையும் பெற்றுக் கொண்டனர்.

இப்போட்டியின் ஆட்ட நாயகனாக 66 பந்துகளில் 4 சிக்ஸர்கள் 12 பவுண்ரிகள் அடங்கலாக ஆட்டமிழக்காது 94 ஓட்டங்களை பெற்றுக்கொண்ட தனுஷ்க குணதிலக்க தெரிவு செய்யப்பட்டார்.

இந்த வெற்றியின் மூலம் காலி அணி அரையிறுதிக்குள் நுழைய, நடப்பு தொடரில் இரண்டு வெற்றிகளை மட்டுமே பதிவு செய்த கண்டி அணி தொடரிலிருந்து வெளியேறியது. (4)

## கிழக்கில்...

இரவு அவர் உயிரிழந்தார்.

கொரோனா தொற்றிற்குள்ளான நிலையில் கல்முனை வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த நிலையில், கொழும்பு ஐ.டி.எச் வைத்தியசாலைக்கு மாற்றுவதற்காக நோயாளர் காவு வண்டியில் கொண்டு செல்லப்பட்டபோது, களுவாஞ்சிக்குடி பகுதியில் அவர் உயிரிழந்தார்.

உயிரிழந்தவரின் மகன் கல்முனை வைத்தியசாலையில் கடமையாற்றி வந்த நிலையில் நேற்று முன்தினம் கொரோனா தொற்று உறுதியானமை குறிப்பிடத்தக்கது. (ம-3)

## கிளிநொச்சியில்...

குறித்த விபத்து இடம்பெற்றுள்ளது.

இவ்விபத்தில் பளை பிரதேசத்தின் புலோப்பளை மேற்கை சேர்ந்த 56 வயதான கிருஸ்ணன் நவநீதன் என்பவரே பலியாகியுள்ளார். (ம-3,100,316)

## மாகாண சபைத்...

தேர்தல்கள் ஆணைக்குழுவுக்கு புதிதாக நியமிக்கப்பட்ட உறுப்பினர்களுக்கும் பிரதமருக்கும் இடையே நேற்று முற்பகல் விஜேராமவிலுள்ள பிரதமரின் உத்தியோகபூர்வ இல்லத்தில் இடம்பெற்ற சந்திப்பின்போதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

பழைய அல்லது புதிய முறைக்கு அமைவாக தேர்தலை நடத்துவதற்கான சந்தர்ப்பம் குறித்து ஆராயுமாறும் பிரதமர் தேர்தல்கள் ஆணைக்குழுவின் உறுப்பினர்களிடம் தெரிவித்தார்.

அதன் காரணமாக இம்முறை மாகாண சபை தேர்தலை பழைய முறைக்கு அமைய நடத்தி, எதிர்காலத்தில் தேவையான சட்டங்கள் உருவாக்கப்பட்டதன் பின்னர் புதிய முறையின் கீழ் அடுத்த தடவை தேர்தலை நடத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்வது எளிதாக அமையும் என தேர்தல் ஆணைக்குழுவின் உறுப்பினர்கள் சுட்டிக் காட்டினர்.

அதற்கு பதிலளித்த பிரதமர் ஏற்கெனவே அது தொடர்பில் சபாநாயகரிடம் கோரிக்கை விடுத்துள்ளதாக குறிப்பிட்டார்.

இந்தச் சந்திப்பில் தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் மூத்த சட்டத்தரணி நிமல் ஜீ.புஞ்சிஹேவா உள்ளிட்ட ஆணைக்குழுவின் உறுப்பினர்கள் மற்றும் பிரதமரின் மேலதிக செயலாளர் சமிந்த குலரத்ன உள்ளிட்ட அதிகாரிகள் கலந்து கொண்டனர். (ம-3)

## தாய், மகளுக்கு...

கப்பட்ட பி.சி.ஆர் பரிசோதனையிலேயே இருவருக்கும் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

வவுனியாவைச் சேர்ந்த தாயும் மகளும் பத்து நாட்களுக்கு முன்னர் கொழும்பிலிருந்து வவுனியா திரும்பியவர்கள் என்று வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் ஆ.கேதீஸ்வரன் தெரிவித்துள்ளார்.

வவுனியா சாளம்பைக் குளத்தைச் சேர்ந்தவர்களான தாய்க்கு 28 வயது என்றும் மகளுக்கு 5 வயது என்றும் அவர்கள் வீடுகளில் சுயதனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட்டிருந்தவர்கள் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

பத்து நாட்கள் கடந்த நிலையில் நேற்று மேற்கொள்ளப்பட்ட பிசிஆர் பரிசோதனையில் அவர்களுக்கு தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளதாகவும் அவர் கூறினார். (ம-3)

## தனித்திருந்த...

தனிமையில் வசித்து வந்த முதியவர் ஒருவர் நேற்று சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

சுமார் 70 வயது மதிக்கத்தக்க லட்சாதிபதி என அழைக்கப்படும் முதியவர் ஒருவரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

இவ்வாறு சடலமாக கண்டறியப்பட்ட முதியவர் உயிரிழந்து இரண்டு நாட்களுக்கு மேலாக இருக்கலாம் எனவும் கருதப்படுகிறது.

இது தொடர்பில் பருத்தித்துறை பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (ம-3)

## யாழில் ஆலயங்...

பாடுகள் தளர்த்தப்பட்டிருப்பதாக யாழ். மாவட்ட அரச அதிபர் க.மகேசன் அறிவித்துள்ளார்.

இது குறித்து ஊடகவியலாளர்களை சந்தித்து நேற்றுக் காலை கருத்து தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார். இதன்போது மேலும் அவர் கூறுகையில்,

யாழ்.மாவட்டத்தில் 874 குடும்பங்களைச் சேர்ந்த 1905 பேர் தனிமைப்படுத்தப்பட்டிருக்கின்றனர்.

இந்நிலையில் மாவட்ட சுகாதார பிரிவுக்கு கொரோனா தடுப்பு செயலணி வழங்கிய உத்தரவுக்கு அமைவாக ஆலயங்களில் 50 பேர் வரையில் வழிபாடு நடத்த அனுமதிக்கப்படுகிறது.

மேலும் விடுதிகள் மற்றும் கல்யாண மண்டபங்களில் பயிற்சி பட்டறைகள், கலந்துரையாடல்கள் நடத்த அனுமதிக்கப்படுகின்றது.

அங்கும் 50 பேர் அனுமதிக்கப்படுவதுடன், வரவுப் பதிவேடு மற்றும் சுகாதார நடைமுறைகள் மிக இறுக்கமான முறையில் கடைப்பிடிக்க வேண்டும்.

ஆனாலும் திருமண மண்டபங்கள், விடுதிகளில் திருமணங்கள் மற்றும் விழாக்களை நடத்த அனுமதி இல்லை. அவை வீடுகளிலேயே சுகாதார நடைமுறைகளை பின்பற்றி நடத்தப்பட வேண்டும்.

அதேபோல் தனியார் கல்வி நிலையங்களை நடத்தவும் அனுமதி மறுக்கப்படுகின்றது.

அலுவலக கடமையின் நிமித்தம் வேறு மாகாணங்களுக்கு செல்லும் அரச ஊழியர்கள் மற்றும் அத்தியாவசிய சேவையில் ஈடுபடும் நபர்களுக்கு தனிமைப்படுத்தல் இல்லை.

ஆனால் அவர்கள் அலுவலக பணி அல்லது அத்தியாவசிய பணிக்காகவே சென்றனர் என்பதை உறுதிப்படுத்த வேண்டும் என மாவட்ட செயலர் கூறியுள்ளார். (ம-3,18,33,101)

## +762 பேருக்கு...

ளார்.

இந்நிலையில், கொரோனா தொற்றினால் பாதிக்கப்பட்டோரின் மொத்த எண்ணிக்கை 31 ஆயிரத்து 375 ஆக அதிகரித்துள்ளது. (ம-3)

## கடந்த 10 நாட்...

முன்தினம் இரவு வரை 26 ஆயிரத்து 981 பேருக்கு வைரஸ் தொற்றியுள்ளது.

இவர்களில் இதுவரையில் 134 பேர் பலியாகியுள்ளனர். (ஒக்ரோபர் 24 முதல் நேற்று முன்தினம் வரை)

மினுவாங்கொட கொத்தணி மூலம் 3 ஆயிரத்து 59 பேருக்கும் பேலியகொட கொத்தணி மூலம் 23 ஆயிரத்து 922 பேருக்கும் வைரஸ் தொற்றியுள்ளது. (ம-3)

## தமிழ்...

கள் மற்றும் அந்த அமைப்பின் ஆதரவாளர்கள் ஆகியோரை விடுவிப்பது தொடர்பில் ஜனாதிபதியே தீர்மானம் எடுக்க வேண்டும்.

இவ்வாறு சிறைச்சாலைகள் முகாமைத்துவம் மற்றும் கைதிகள் புனர்வாழ்வு இராஜாங்க அமைச்சர் லொஹான் ரத்வத்த தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது,

"தமிழ் அரசியல்வாதிகள் கூறும் தமிழ் அரசியல் கைதிகள் பயங்கரவாதச் செயற்பாடுகளில் ஈடுபட்ட காரணத்தினாலேயே பயங்கரவாதச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டார்கள். அவர்களில் தண்டனை விதிக்கப்பட்டவர்களும் வழக்கு விசாரணையை எதிர்கொள்பவர்களுமே தற்போது சிறைகளில் உள்ளனர்.

எனவே, அவர்களை விடுவிப்பது தொடர்பில் ஜனாதிபதான் தீர்மானம் எடுக்க வேண்டும். அது தொடர்பில் நான் எந்தக் கருத்தையும் தெரிவிக்க முடியாது என்றார். (ம-3)

## உருத்திரபுரம்...

களம் மரபுரிமை சார்ந்த பிரதேசம் என அடையாளப்படுத்தி தங்களின் கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வந்திருந்தது.

குறித்த பிரதேசத்தில் தொல்லியல் திணைக்களத்தினால் ஆய்வுகள் மேற்கொள்ளப்படுகின்றபோது அங்கு ஏதாவது பௌத்த வரலாற்று எச்சங்கள் காணப்படுமாயின் அந்த இடத்தில் புதிய விகாரை ஒன்று அமைப்பதற்கான நடவடிக்கைகள் தொடர்ந்து முன்னெடுக்கப்படும் எனவும் சில தகவல்கள் தெரிவிக்கின்றன. (ம-3)

## மருதனார்மடம்...

கடை வைத்துள்ள 39 வயதான குடும்பஸ்தர் ஒருவர் பகுதி நேரமாக ஆட்டோ ஓட்டி வரும் நிலையில் அந்த பகுதியில் உள்ள முச்சக்கரவண்டி சாரதிகளிடம் எழுமாறாக பி.சி.ஆர்.சோதனை மேற்கொள்ளப்பட்டது.

குறிப்பிட்ட நபரும் முச்சக்கரவண்டி வைத்திருப்பவர்என்ற அடிப்படையில் பி.சி.ஆர்.சோதனைக்குட்படுத்தப்பட்ட போதே தொற்று உறுதியானது.

இவருக்கு எவ்வாறு தொற்று ஏற்பட்டது என்பது இன்னும் உறுதியாகவில்லை. மருதனார்மடத் தில் தொற்றுக்குள்ளானவர் சகல பிரதேசங்களிலும் நடமாடியுள்ளதாக அப்பகுதி மக்கள் தெரிவித்துள்ளனர்.

இந்நிலையில் இன்றையதினம் அவருடன் தொடர்புபட்டவர்களுக்கு பிசிஆர் பரிசோதனை மேற்கொள்ளப்பட உள்ளதோடு அதனடிப்படையில் குறித்த சந்தையினை மூடுவதா? அப்பகுதியை முடக்குவதா? என்பது தொடர்பில்மாவட்ட கொரோனா ஒழிப்பு செயலணி ஆராய்ந்து முடிவெடுக்கும் எனவும் தெரிவித்தார். (ம-3,18,101)


மெகா பவர்
திகதி 11/12/2020
சீட்டிழுப்பு இலக்கம் 0700
G 11 01 07 41 75

சுபிரி வாசனா
2020/12/11 1556
04 01 16 18 59

மஹஜன சம்பத
திகதி 2020/12/11
சீட்டிழுப்பு இலக்கம் 4333
N 3 1 3 0 4 7

கொவிசெத உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 11.12.2020
சீட்டிழுப்பு இலக்கம் 2628
T 01 02 20 44

தன நிதானய
திகதி -2020.12.11
சீட்டிழுப்பு இலக்கம் -370
H 07 19 47 78

அத கோடிபதி
கிழமை: வெள்ளி
சீட்டிழுப்பு இல: 1129
சீட்டிழுப்பு திகதி: 11.12.2020
இன்றைய ஜக்பொட் பரிசு
ரூ. 89,959,315
10 11 25 66 C

சனிதா
கிழமை: வெள்ளி
சீட்டிழுப்பு இல: 3459
வர்ணம்: செம்மஞ்சள்
சீட்டிழுப்பு திகதி: 11.12.2020
இன்றைய ஜக்பொட் பரிசு
ரூ. 35,572,319
வெற்றி இலக்கங்கள்
01085468 C

ராசி
சுப்பர் ஜக்பொட்
6,167,478/=
வெற்றி இலக்கங்கள்
13 18 26 35
திகதி : 11.12.2020
வெற்றி வாரம் : 3010
வர்ணம் : கடும் நீலம்
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை
ரூ. 8,526,700

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 1303
சீட்டிழுப்பு திகதி 11/12/2020
நிறம் இளஞ் சிவப்பு
தினம் வெள்ளி
வெற்றி எழுத்தும் இலக்கங்களும்
R 35 62 65 75
அடுத்த சுப்பர் ஜக்பொட்
57,516,014

X 18 27 36 42
662
பச்சை
11.12 2020
வெள்ளி
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.
76,613,250
தொ.பே: 0112 333 546/47
Web: www.dlb.lk

10 வருட வெற்றிகரமான சேவையில்....

# கனடாவில் உயர்கல்வி

குறைந்த கட்டணத்தில்
இலகுவாக செல்லக்கூடிய நேர்வழி

எமது விசா ஆலோசனை வாயிலாக
கனடா சென்ற மாணவர்களினை நேரில்
வரும் சந்தர்ப்பத்தில் பார்வையிடமுடியும்

புதிய பிரிவுகள் ● திருமணமாகி லண்டன் செல்பவர்களுக்கான LIFESKILLS A1 வகுப்புக்கள் மற்றும் GERMAN A1 வகுப்புக்கள் IELTS வகுப்புக்கள் 12/12/2020 அன்று மாலை 03 மணிக்கு ஆரம்பம். (C-885)

இலவச பதிவுகளுக்கு : 0779265447 (please call at 10am - 5pm)

யாழ் மற்றும் சாவகச்சேரி நகர்களில் கடந்த 10 வருடங்களாக மிகநேர்த்தியாக சேவையாற்றிவரும் ஒரேயொரு முன்னணி நிறுவனம்

நேரில்வந்து சந்தித்து இலவச ஆலோசனைகளை அறிந்து கொண்டு பயன்பெற...

WORLD EDUCATION CONSULTANCY

அலுவலகம்: புதிய உயர் கல்லூரி வளாகம்
ஆரியகுளம் யாழ்ப்பாணம்
கிளை: சங்கத்தானை சாவகச்சேரி.
0779265447 / 0217200989

## வாடகைக்கு

யாழ். திருநெல்வேலி பரமேஸ்வரா சந்தியில் பலாலி வீதியை முகப்பாகக் கொண்ட வியாபார நிலையம்,
கல்வி நிலையங்கள், வர்த்தக நிலையங்களுக்கு ஏற்றது. (4929)

077 953 0496

## விரைவு பொதிகள் சேவை

V2 TRAVELS

UK- 1025 /=Kg

0768226240

எமது நேரடிக்கிளைகள்
● யாழ்ப்பாணம் ● கிளிநொச்சி ● சாவகச்சேரி
● நெல்லியடி ● கொடிகாமம் ● மானிப்பாய்
● புதுக்குடியிருப்பு ● சுன்னாகம்
● பருத்தித்துறை ● வல்வெட்டித்துறை
(C-848)

# நாமும் தேர்தலுக்கு தயாராவோம்

(கொழும்பு)

மாகாண சபைத் தேர்தலுக்கு தயாராக வேண்டும். கட்சி மறுசீரமைப்பு பணிகளை விரைவு செய்து வலுவாக செயற்பட வேண்டும். மக்கள் ஆளும் கட்சியில் குறுகிய காலத்தில் வெறுப்பை கொண்டுள்ளனர். எதிர்பார்த்தளவு எதிர்க்கட்சியின் நடவடிக்கைகளும் அமை யவில்லை. எனவே ஐக்கிய தேசியக் கட்சி மீண்டும் தலை தூக்க எதிர்வரும் மாகாண சபை தேர்தல் வழிவகுக்கும் எனவும் ஐ.தே.க. தலைவர் ரணில் தெரிவித்தார்.

மாகாண சபை தேர்தலை ஏப்ரலில் நடத்த அலரிமாளிகையில் பசில் ராஜபக்ஷ ஏற்பாடுகளைச் செய்து வருகின்றார். பழைய முறைமையில் தேர்தலை நடத்துவதற்கான சட்டமூலத்தை ஆளும் கட்சி ஜனவரி மாதம் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கவுள்ளதாக அவர் தெரிவித்தார்.

ஐக்கிய தேசிய கட்சி உறுப்பினர்கள் நேற்று முன்தினம் வியாழக்கிழமை கலந்துரையாடலின்போது ரணில் விக்கிரமசிங்க மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

மாகாண சபை தேர்தலை ஏப்ரல் மாதத்தில் நடத்துவதற்கான முயற்சிகளில் அரசாங்கம் தீவிரமாகச் செயற்பட்டு வருகின்றது.

பழைய முறைமையில் மகாண சபை தேர்தலை நடத்துவதற்கான திருத்த சட்டமூலத்தை ஜனவரியில் பாராளுமன்றத்தில் ஆளும் கட்சி சமர்ப் பிக்கவுள்ளது. (நி-4)

## தேவை

யாழ். திருநெல்வேலியிலுள்ள எமது கட்டடத்திற்கு
● சித்திர வேலைப்பாட்டு (Artistic) பெயின்ரிங் செய்யக் கூடியவர்கள்.
● பெயின்ரிங் வேலை உதவியாளர்கள்.
● மாபிள் வேலை செய்பவர்கள். (4929)

075 099 9243

## வீடு வாடகைக்கு

கச்சேரி - நல்லூர்
வீதியில் 10 அறைகளுடன்
கூடிய மாடி வீடு
வாடகைக்குண்டு.
( நிறுவனங்களுக்கு உகந்தது. )

தொடர்பு (4907)
076 675 7518

## அண்ணா விரைவுப் பொதிகள் சேவை

பிரான்ஸ் டென்மார்க் பெல்ஜியம் ஜேர்மனி கொலண்ட் ஸ்பெயின் >> 1150/=
லண்டன் >> 1050/= இத்தாலி >> 1250/=
5kgக்கு மேல் 11kgக்கு மேல் 21kgக்கு மேல் கட்டணம் குறைவு (C-851)
மேலதிகமாக எவ்வித கட்டணங்களும் வெளிநாட்டில் இல்லை
கனடா- அமெரிக்கா- 1450/= சுவிஸ்- 1350/= (வரி உள்ளடக்கப்பட வில்லை)
உங்கள் இடங்களுக்கு வந்து பொதிகள் பெற்றுக் கொள்ளப்படும். (கட்டணம் வேறுபடும்)
பொதிகளுக்கு 20,000ரூபா பெறுமதி வரையான காப்புறுதிக் கட்டணம் இலவசமாக உள்ளடக்கப்பட்டுள்ளது
எம்முடன் இணைந்து பொதிகள் சேவை தொடங்குவதாயின் தொடர்பு கொள்ளவும்
070 330 5500 077 888 9388 075 330 5500

976,கேகேஎஸ் வீதி நாச்சிமார்கோவிலடி யாழ்ப்பாணம் | சங்கானை சண்டிலிப்பாய் சுன்னாகம் | நெல்லியடி ஆவரங்கால் சங்கத்தானை | புதுக்குடியிருப்பு முல்லைத்தீவு ஒட்டிசுட்டான் | கிளிநொச்சி வவுனியா மன்னார் | கனகராயன்குளம் மல்லாவி துணுக்காய்

வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603
021 567 1532

## கண்ணீர் அஞ்சலி



கொக்குவில் மஞ்சவனப்பதி முருகன் ஆலய தர்மகர்த்தா சபையின் சமய ஆலோசகராகப் பணியாற்றி சமய ஆலோசனைகளை வழங்கிவந்த

அமரர்

**சைவப் புலவர் முத்துக்குமாரசாமி திருஞானசம்பந்தபிள்ளை**

அவர்கள் இறைபதம் அடைந்த செய்தி அறிந்து ஆலய சமூகம் பெரும் துயரடைகின்றோம். அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்வதோடு அன்னாரின் ஆத்மா மஞ்சவனப்பதி முருகன் திருவடிகளை சென்றடையப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

(4927)

தர்மகர்த்தா சபை
கொக்குவில் மஞ்சவனப்பதி முருகன் ஆலயம்

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



தோற்றம்
11.11.1938

மறைவு
13.11.2020

அமரர்

**மாணிக்கம் கந்தசாமி**

திங்களொன்று ஆனதப்பா
அன்பு கொண்ட உம் வதனம்
அருகினில் இருப்பது போல்
உணர்கின்றோம் அன்பால் என்றும்!


கடந்த 13.11.2020 அன்று இறைபதம் அடைந்த எமது குடும்பத் தலைவர் மாணிக்கம் கந்தசாமி அவர்களது சிவபதப்பேறு குறித்த அந்தியேட்டிக் கிரியைகள் நாளை (13.12.2020) ஞாயிற்றுக்கிழமை காலை 6.00 மணியளவில் திருநாவலூர் தெணியம்மன் கோவில் அந்தியேட்டி மடத்தில் நடைபெற்று வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் அன்னாரது இல்லத்தில் மு.ப 11.30 மணியளவில் நடைபெறும்.

எமது குடும்பத் தலைவரின் மரணச் செய்தி கேட்டு பல வழிகளிலும் உதவி புரிந்தோருக்கும், வெளிநாடுகளிலும் உள்நாட்டில் இருந்தும் முகநூல்கள், தொலைபேசிகள், குறுந்தகவல்கள், மின்னஞ்சல்கள், பதாகைகள் வாயிலாகவும் அனுதாபங்களைத் தெரிவித்தவர்களுக்கும், கண்ணீரஞ்சலி பிரசுரங்களை வழங்கியோருக்கும் மற்றும் இறுதி நிகழ்வுகளில் கலந்து கொண்டோருக்கும் எமது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

பாடசாலை வீதி,
திருநாவலூர், பருத்தித்துறை. (C-893) 077 850 7330

தகவல் :
குடும்பத்தினர்

## அந்தியேட்டி சபிண்டீகரண அழைப்பும் நன்றி நவிலலும்



தோற்றம்
10 . 08 . 1940

மறைவு
13 . 11 . 2020

அமரர்

**பொன்னையா சுந்தரலிங்கம்**

ஓய்வுபெற்ற அரச கணக்காய்வுப் பரிசோதகர்

கடந்த 13.11.2020 அன்று இறைவனடி சேர்ந்த எமது குடும்ப சமூகசேவகன் அமரர் பொன்னையா சுந்தரலிங்கம் அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் நாளை ( 13.12.2020 ) ஞாயிற்றுக்கிழமை காலை 6.00 மணியளவில் கீரிமலை புனித தீர்த்தக்கரையில் நடைபெறும். பின்பு அன்னாரது இல்லத்தில் முற்பகல் 11.00 மணியளவில் நடைபெறும் சபிண்டீகரண நிகழ்விலும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு தங்களை அன்புடன் அழைக்கின்றோம்.

*இவ் அழைப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்.*

மேலும் அன்னாரின் மறைவையொட்டி அனுதாபங்கள் தெரிவித்தவர்களுக்கும், கண்ணீர் அஞ்சலிகள், பதாதைகள், தொலைபேசிகள், சமூக வலைத்தளங்களில் அனுதாபங்கள் தெரிவித்தவர்களுக்கும் இறுதி ஊர்வலத்தில் கலந்து கொண்டவர்களுக்கும் மற்றும் சகல வழிகளிலும் உதவி ஒத்தாசை புரிந்தவர்களுக்கும் நாளைய நிகழ்வுகளில் கலந்து கொள்வோருக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

சதா பொன்ஸ்
அல்வாய் கிழக்கு, அல்வாய். (C-897)

குடும்பத்தினர்

இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 12.12.2020 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.